அறிவொளி கற்போர்களின் எழுத்தறிவுத் திறன்கள்

(புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு மதிப்பீடு)

கு. அண்ணாதுரை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் — 613 005

அறிவொளிக் கற்போர்களின் எழுத்தறிவுத் திறன்கள்

(புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு மதிப்பீடு)

ஆசிரியர்
முனைவர் கு. அண்ணாதுரை
இயக்குநர்
ஈடாளர் (வயதுவந்தோர்) கல்வித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
613 005

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண் : 207

திருவள்ளுவராண்டு 2029 பங்குனி - ஏப்பிரல் 1998

நூல்	:	அறிவொளிக் கற்போர்களின் எழுத்தறிவுத் திறன்கள்
ஆசிரியர்	:	முனைவர் கு. அண்ணாதுரை
பதிப்பு	:	முதற்பதிப்பு
அச்சுக் கோர்ப்பு	:	பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
விலை	:	ரூ. 30/-
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம் தஞ்சாவூர் -1

முனைவர் கி. கருணாகரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அணிந்துரை

இந்திய அளவில் நானூற்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் எழுத்தறிவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. தமிழகத்திலும் பல மாவட்டங்கள் அறிவொளிக் கல்வி வாயிலாக முழு எழுத்தறிவினை அளித்துள்ளன. தொடர்ந்து அளித்தும் வருகின்றன. தமிழகத்தில் ஏறக்குறைய இருபத்து ஐந்து இலட்சம் மக்கள் அறிவொளி மூலம் எழுத்தறிவு பெற்றுள்ளனர். புதிதாகக் கற்றுக் கொண்ட இவர்கள் தொடர்ந்து படிக்க தொடர்கல்வித் திட்டம் பல மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இப்புதிய கற்போர்களின் கற்றல் தேர்ச்சியினை அளவிட வேண்டியது இன்றியமையாததாகிறது. நடுவண் மற்றும் மாநில அரசுகள் வழங்குகின்ற பல கோடி முதலீட்டில் நடைபெறுகின்ற இத்திட்டத்தின் செயல்பாட்டையும், அதில் கற்பவர்களின் தேர்ச்சியையும் தற்சார்பற்ற நிலையில் கண்டறிய வேண்டியது பல்கலைக்கழகங்களின் கடமையாகும். குறிப்பாகப் பல்கலைக் கழகங்களில் இயங்கி வருகின்ற வயதுவந்தோர் கல்வித் துறையினர் இவ்வாறான பணிகளில் மிகவும் ஆர்வம் காட்டி வருவது பாராட்டுதலுக்குரியது.

இந்நூல், வயது வந்தோர் கல்வித்துறை இயக்குநர் முனைவர் கு. அண்ணாதுரை அவர்கள் *1993*இல் இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய எழுத்தறிவுத் திறன் - ஒரு மதிப்பீடு என்ற ஆய்வேட்டிலிருந்து உருவாக்கப்பட்டது. அறிவொளித் திட்டத்தில் கற்போர்களை எவ்வாறு மதிப்பிடுவது: மதிப்பிடக் கூடிய மொழித் திறன்கள் யாவை; மற்றும் மதிப்பீட்டு முறைகள் போன்றனவற்றைத் தெளிவாக விளக்கக் கூடிய நூலாக அமைந்துள்ளது.

வயதுவந்தோர் கல்வியிலும், அறிவொளிக் கல்வியிலும் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஓர் ஒன்றியப் பகுதியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, *15* விழுக்காட்டினைச் சான்றாகப் பிரதிநிதித்துவ

அடிப்படையில் தெரிவு செய்து கற்போர் தேர்ச்சி கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு நூலை உருவாக்கிய பேராசிரியர் முனைவர் கு. அண்ணாதுரை அறிவொளிக் கல்வியில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். கடந்த *15* ஆண்டுகளுக்கு மேலாக இப்பணியில் தம்மை முழுமையாக உட்படுத்தி அயராது உழைத்து வருபவர். இவர் மேலும், தொடர்கல்வி மற்றும் வளர்கல்வி இயக்கங்களில் ஈடுபாடு கொண்டு எழுத்தறிவுப் பணியாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

01 . 04 . 98

தஞ்சாவூர்

கி. கருணாகரன்

முகப்புரை

எழுத்தறிவுத் திட்டங்கள் மூலம் அனைவருக்கும் எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் விழிப்புணர்வு கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக *1978* முதலே இந்திய அரசு பெரும் முயற்சி மேற்கொண்டு வந்துள்ளது. இருப்பினும் *1988* இல் தேசிய எழுத்தறிவு முனையம் (National Literacy Mission) ஆரம்பிக்கப்பட்டதிலி ருந்து எழுத்தறிவு இயக்கங்கள் நமது நாட்டில் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன.

தமிழ் நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் அறிவொளி இயக்கம் எழுத்தறிவு இயக்கமாக மலர்ந்து வருவதைக் காணலாம். எழுத்தறிவுப் பணியில் முதல் கட்டத்தை அறிவொளிக் கல்வி என்றும், இரண்டாம் கட்டத்தைத் தொடர்கல்வி மற்றும் வளர்கல்வி என்றும் கூறுகிறோம்.

அறிவொளிக் கல்வியில் தாய்மொழியில் எழுத்தறிவும், எண்ணறிவும், விழிப் புணர்வும் ஒருங்கிணைந்த முதல்நூல் (Integrated primer) வழி பயிற்றுவிக்கப் படுகிறது. இம்முதல் நூலில் பாடப்பகுதி எழுத்தறிவு, எண்ணறிவு என்ற வகையில் ஒவ்வொரு பாடத்திலும் இணைந்தே வரும். இதையே நாம் ஒருங்கிணைந்த முதல் நூல் என்றழைக்கிறோம்.

1989 இல், முதன் முதலில் அறிவொளி இயக்கம் வெற்றி கண்டது கேரளாவில்தான். அதனைத் தொடர்ந்து புதுச்சேரியும் பின்னர்த் தமிழகத்தில் புதுகை மாவட்டமும் இத்திட்டத்தில் முழு வெற்றி கண்டன.

தமிழகத்தில் முதன் முதலில் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாகப் புதுக்கோட்டை மாவட்டம் அறிவிக்கப்பட்டது. அங்குள்ள அனைவரும் அறிவொளிவழி எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் எழுத்தறிவுப் பணியை அம்மாவட்டத்தில் இணைந்து செயல்படுத்தின. எனினும் கற்போர்களது தேர்ச்சியைப் புற மதிப்பீட்டளவில் அளவிட வேண்டும் என்ற எண்ணம் பல்கலைக்கழகங்களிடையே இருந்து வந்தது. அவ்வெண்ணத்தின் முதல் முயற்சியாகத் தமிழ்ப் பல்கலைக்கழக வயதுவந்தோர் கல்வித் துறை மாதிரி முறையில் புதுக்கோட்டை அறிவொளிக் கற்போர்களின் தேர்ச்சி நிலையைக் கண்டறிய விரும்பியது. தமிழ்ப் பல்கலைக்கழகம் தந்த நிதி உதவியோடு இம் மதிப்பீட்டாய்வை நான் மேற்கொண்டேன். கற்போர்களின் தேர்ச்சி (achievement level), தேசிய எழுத்தறிவு முனையம் விதித்துள்ள மொழித்திறன்கள் (Literacy skills) வழி இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது இதற்கான வினாப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுக் களத்தில் (field) கற்போர்களிடம் (learners) சோதனை செய்யப்பட்டது.

அறிவொளித் திட்டத்தில் இரண்டு வகையான மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. ஒன்று அக மதிப்பீடு, மற்றொன்று புறமதிப்பீடு

அகமதிப்பீடு என்பது திட்டத்தைச் செயற்படுத்துபவர்களே மேற்கொள்வது. புறமதிப்பீடு வெளி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுவது. அறிவொளி போன்ற பெருந்திட்டங்களுக்கு இதுபோன்ற நிகழ்நிலை மதிப்பீடு அவசியம் தேவைப்படுகிறது. இலட்சக்கணக்கான கற்போர்களைப் புறமதிப்பீடு செய்வது மிகவும் கடினமான பணி என்பதால் மாதிரி அடிப்படையில் இம் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தனிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ள அனுமதி அளித்த தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்திற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த ஆய்வேட்டினை அச்சிட்டு நூலாகக் கொண்டுவர அனுமதியளித்த துணைவேந்தர் முனைவர் கி. கருணாகரன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இளம் ஆய்வாளர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஊக்குவித்தும் உற்சாகப்படுத்தியும் வருகின்றார் இவர். இவரது அயராத உழைப்பும் உதவியும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதிய பரிமாணங்களைக் காட்டுவன. அன்னாரது மாணவர் என்பதில் நான் பெருமையடைகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் நாற்பது நாட்கள் நான் களஆய்வு மேற்கொண்டபொழுது, அன்றைய நாட்களில் எனக்குப் பல்லாற்றானும் உதவியவர் ஒன்றிய அறிவொளித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சொக்க. ராதாகிருஷ்ணன் ஆவார். இவர் தொடக்கக் கல்வி ஆசிரியரும்கூட. அன்னாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் எனக்களிக்கப்பட்ட பங்கும் அதன்வழி நான் பெற்ற அனுபவங்களும், இம்மதிப்பீட்டாய்வை மேற்கொள்ளத் தூண்டின என்பது உண்மை. அந்த வகையில் தஞ்சை மாவட்ட அறிவொளி இயக்க மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வெ. கோபால்சாமி, ந. குருசாமி போன்றவர்களை நான் மறந்துவிட முடியாது. அவர்களுக்கும், தஞ்சை மாவட்ட அறிவியல் இயக்கப் பொறுப்பாளர்களான திரு அ. வள்ளிநாயகம், எஸ். சுத்தானந்தம் போன்றவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக்கழக அன்றையப் பதிவாளர் பேரா. கி. அரங்கன், இன்றையப் பதிவாளர் முனைவர் கா. செயராமன் மற்றும் ஈடாளர்கல்வி துறை உதவியாளர் திருமதி டி. ஜீவா அவர்களுக்கும் எனது நன்றியறிதலை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளிக் கொணர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை மற்றும் அச்சகப் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
ஏப்பிரல், *1998*

கு. அண்ணாதுரை

பொருளடக்கம்

1. முன்னுரை 1

2. தரவுகள் சேகரித்தலும் பரிசாத்த முறையும் 15

3. கற்போர்களின் தேர்ச்சி நிலையும் மற்றும் சமூகக் காரணிகளும் 27

4. புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி பற்றிய மதிப்பீடு 33

5. துணை நின்ற நூல்கள் 37

6. பிற்சேர்க்கை

    1. வினாத்தாள் 39

    2. அறிவொளி அனுபவங்கள் 45

    3. தமிழகத்தில் எழுத்தறிவு நிலை 48

    4. உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை 49

7. கலைச்சொற்கள் 50

முன்னுரை

எழுத்தறிவின்மை இன்று உலகப் பிரச்சினையாகியுள்ளது. வளர்ந்துள்ள நாடுகள் அனைத்தும் தன்னிறைவு பெற்றுள்ளன. பெருவாரியான இந்திய மக்கள் எழுத்தறிவு பெறவில்லை. இதை "இந்தியாவின் அவமானம்" என்று காந்தியடிகள் சுட்டிக்காட்டினார். நம் தேசத்தலைவர்கள் எழுத்தறிவின் அவசியத்தை நன்கு சுட்டிக்காட்டியுள்ளனர். பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும் எழுத்தறிவின் அவசியம் பற்றித் தமது கவிதைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம்
பதினாயிரம் நாட்டல் . . . .
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"

என எழுத்தறிவின் அவசியம் பற்றிப் பாரதியார் முழங்கினார்.

"மலை வாழையல்லவோ கல்வி! - நீ
வாயார உண்ணுவாய் போ என் புதல்வி
படியாத பெண்ணாய் இருந்தால் - கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தல்
கடியாரம் ஓடும் முன் ஓடு கல்வி
கற்றிடக் கற்றிடத்தெரியும் அப்போது"

எனப் பாவேந்தர் அவர்களும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியிருக்கிறார். குறிப்பாக, பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்பதை அவர் வலியுறுத்திச் சென்றார்.

திருவள்ளுவர் முதல் நம் புலவர் பெருமக்கள் வரை அனைவரும் கல்வியின் பெருமைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அனைவருக்கும் ஆரம்பக்கல்வி கொடுக்கப்படும் என்று நம் முன்னோர்கள் அரசியல் சாசனத்தில் *45* ஆவது

பிரிவின்கீழ் உத்தரவாதம் கொடுத்தார்கள். இந்த உறுதி அறிவிப்பு *1950* ஆம் ஆண்டே கொடுக்கப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்து *50* ஆண்டுகளாகியும் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கொடுக்கப்படவில்லை. இந்தியாவின் எழுத்தறிவு நிலை *52.11* சதவிகிதமாகவே உள்ளது. தமிழ்நாட்டின் நிலை *63.72* சதவிகிதமாகவுள்ளது. *1991* புள்ளி விவரப்படி இந்தியாவில் *32.4* கோடி மக்கள் இன்னும் எழுத்தறிவு பெறாதவர்களாக இருக்கின்றனர். தமிழ்நாட்டில் இன்னும் *78* இலட்சம் பேர்கள் *(15* வயது முதல் *35* வயதுக்குட்பட்டவர்கள்*)* எழுத்தறிவு பெறாமல் இருக்கிறார்கள். அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் வளர்ந்துவிட்ட இந்திய மக்களுக்கு நம் முன்னோர்கள் பலவழிகளிலும் கல்வி கொடுத்திட முனைந்தனர்; முதியோர் கல்வியென்றும், முறைசாராக் கல்வியென்றும் நடமாடும் நூலகமென்றும் ஆரம்பக் கல்விஎன்றும் தொடங்கினார்கள். இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் *1930* ஆம் ஆண்டில் இச்சிந்தனை தீவிரமாக இருந்துள்ளது. *1931*இல், மேலவாசல் என்னும் சிற்றூரில் நடமாடும் நூலகம் ஒன்று தொடங்கப்பட்டது.' *1936*இல் ஆண்டிப்பட்டியிலும், *1958*இல் சென்னையிலும் நடமாடும் நூலகங்கள் தொடங்கப்பட்டன. மத்திய அரசு *1988*இல் 'தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்'கத்தைத் தொடங்கி முழு எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்தியது. இத்திட்டம்தான் 'அறிவொளி இயக்கம்' என்ற பெயரில் இன்று மிளிர்கிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் *1991* ஆம் ஆண்டில் அறிவொளி இயக்கத் திட்டமாகத் தொடங்கப்பட்டது. முதலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசால் தொடங்கப்பட்டது. *23 . 7 . 1991* இல் ஆரம்பித்து *14 . 04 . 1992* இல் இத்திட்டம் முடிவடைந்தது. சுமார் *2,90,000* மக்கள் இதன் மூலம் எழுத்தறிவு பெற்றனர்.

இந்த ஆய்வின் நோக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற அறிவொளி இயக்கத்தில் எழுத்தறிவு பெற்ற புதிய கற்போர்களின் (Neo-literates) கற்றல் தேர்ச்சியை அறிவதாகும். இம்மாவட்டத்தில் உள்ள கந்தர்வகோட்டை ஒன்றியப் பகுதிகளில் சுமார் இருநூறு கற்போர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் எழுத்தறிவுத் திறன்களைக் கண்டறிய ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது. கற்போர்கள் இருக்கின்ற இடங்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டு அவர்களைச் சந்தித்துத் தேர்வு நடத்தி, அவர்கள் பெற்ற எழுத்தறிவுக் கல்வியின் மதிப்பீடே இவ்வாய்வு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்ற முதல் மாவட்டமாகத் தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய எழுத்தறிவு இயக்கம் விதித்துள்ள அடிப்படைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதை அறிவதும், கற்போர்களின் தேர்ச்சி தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கத்தின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கி இருக்கிறதா

என்பதைப் பற்றி ஆராய்வதும் இவ்வாய்வின் நோக்கங்கள் ஆகும். இவ்வாய்வு நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை முறையே:

1. முன்னுரை
2. மதிப்பீட்டுக் குறிப்புகள் சேகரித்தலும் பரிசாத்த முறையும்,
3. கற்போர்களின் தேர்ச்சி நிலை மதிப்பீடும் மற்றும் சமூகக் காரணிகளும், மற்றும்
4. புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி பற்றிய மதிப்பீடு.

எழுத்தறிவின் அவசியம்

"நிறுவனமயமாக்கப்பட்ட கல்வி முறையினால்தான் சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை அநேகமாக இருந்து வருகிறது. மாறாக, மக்களின் தேவைக்கு ஏற்ப கல்வி மற்றும் கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். . . . ஆனால் மக்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் படைத்தவர்களின் விருப்பத்திற்கு இணங்க கல்வி முறை உருவாக்கப்படுகிறது." என்று பிரேசில் நாட்டு சமூகவியல் நிபுணர் பாலோ பிரேயர் கருத்துத் தெரிவித்துள்ளார். கல்வி என்பது ஒரு சமூகத்தின் வெளிப்பாடு மற்றும் அதன் காரணமாக அமைகிறது. மேலும் கல்விக்கு அடித்தளமாக அமைவது 'எழுத்தறிவு.' இது ஒரு அனுபவம். கற்றவர்களுக்குத்தான் இதன் சுகம் தெரியும். எழுத்தறிவு இன்றையத் தேவையாகிவிட்டது. ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்று சொல்வார்கள். ஆனால் இன்று எழுத்தறிவற்றவர்களையும் அரை மனிதன் என்று சொல்லுகின்ற காலம் வந்துவிட்டது. முன்னேறிய நாடு என்று சொல்லுவதுகூட எழுத்தறிவு நிலையை வைத்துதான். பழமையான சமூகம் என்று சொல்லுவதும், நாகரிகமில்லா மனிதன் என்று சொல்வதும் கல்வியை வைத்துதான்.

எழுத்தறிவு, காலத்தின் கட்டாயம் ஆகிவிட்டது. சுயசார்பிற்கும் எழுத்தறிவுக்கும் தொடர்பு இருக்கிறது; பொருளாதார வளர்ச்சிக்கும் எழுத்தறிவுக்கும் தொடர்பு இருக்கிறது; வாழ்க்கைத் தரத்திற்கும் எழுத்தறிவுக்கும் தொடர்பு இருக்கிறது. எனவேதான் எழுத்தறிவு முன்னேறிய சமூகத்தின் சின்னம் என்றெல்லாம் சொல்வார்கள். மேலும் சொல்வதானால் எழுத்தறிவு என்பது ஒரு கலை, அது சிந்திக்கின்ற திறனைக் கொடுக்கிறது; எனவேதான் எழுத்தறிவு சமூக வளர்ச்சிக்கும் தனி மனிதனுக்கும் அவசியம் தேவை என்று சொல்லப்படுகிறது.

கல்விக் கொள்கையினை மறுபரிசீலனை செய்யும்பொருட்டு 1964இல் டாக்டர் டி.எஸ். கோத்தாரி தலைமையில் கல்விக் குழு ஒன்று இந்திய அரசால் நியமிக்கப்பட்டது. இக்கல்விக்குழு வயது வந்தோர் கல்விக்கென முழுமையான திட்டம் ஒன்றினை ஒதுக்கி, எழுத்தறிவு இன்மையை ஒழிப்பதற்குப் பல உள்

திட்டங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்கல்வித் திட்டம் கொடுத்தல், நூல் நிலையங்கள் அமைத்தல் மற்றும் பல்கலைக்கழகங்களின் பங்குகள் அதில் சொல்லப்பட்டுள்ளன.

கல்வி என்பது பள்ளியோடு முடிந்துவிடுவது அல்ல; அது வாழ்நாள் வரைத் தொடர்வது. வயதுவந்தவர்கள் வேகமாக மாறி வருகின்ற சமூகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதனுடைய நுண் அமைப்புகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். படித்தவர்கள் கூட தொடர்ந்து கற்க வேண்டும். இல்லையேல் சமூகத்தினால் புறக்கணிக்கப்படுவார்கள் என்று அக்கல்விக் கொள்கை தெரிவிக்கின்றது.

எந்த நாடும் தன்னுடைய பாதுகாப்பைப் போலீஸ்காரர்களிடமும், ராணுவத்தினரிடமும் முழுவதுமாக விட்டுவிட முடியாது. பதிலாக நாட்டின் பாதுகாப்பு, மக்களின் கல்வி, பொதுஅறிவு, ஒழுக்கம், பண்பாடு, பாதுகாப்பு வழிகளில் பங்கேற்பு முதலியவற்றைப் பொருத்து அமைகிறது.

சனநாயகத்தில், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் ஒருவன் தன்னுடைய திறமையை வளர்த்துக்கொள்ள, வாழ் நாளில் கல்வி பெறும் சந்தர்ப்பத்தை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பது வயதுவந்தோர் கல்வியின் பயனாகும்.

பொதுவாக, எல்லோருக்கும் கல்வி என்பதும், கட்டாயக் கல்வி என்பதும் வயதுவந்தோர் கல்வியின் நோக்கங்களாகும். இந்தியாவில் *50* விழுக்காடு மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கின்ற காரணத்தினால், எழுத்தறிவு இல்லாமையை ஒழிப்பது உடனடியாகச் செய்யப்படவேண்டிய முக்கியத் தேசியக் கடமையாகிறது. எனவே, எழுத்தறிவுத் திட்டம் கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

எழுத்தறிவு இன்மையை ஒழிப்பது
தொடர்கல்வி கொடுப்பது
தொலைதூரக் கல்வியை ஏற்படுத்துவது
நூல்நிலையங்கள் அமைப்பது
பல்கலைக்கழகங்களில் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை ஏற்பாடு செய்வது போன்றன.

ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற பழமையான முறைகளைத் தவிர்த்து தேசியஅளவில் ஒரு பெரும் திட்டத்தை அரசு அறிவிக்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டது.

கல்லாமை என்பது மக்கள் பிரச்சினை; இது சமூகப், பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது; பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கிறது;

மக்கள் கட்டுப் பாட்டைப் பாதிக்கிறது; தேச ஒற்றுமை, பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் முதலியனவற்றைத்தடை செய்கிறது

கற்றறிந்த பாரம்பரியம் நிறைந்த நம் நாட்டில் படிக்காதவர்கள் பெருவாரியாக இருப்பது கற்றவர்களுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் கல்லாமையின் விளைவுகளைப் பற்றியும் அவற்றைப் போக்கக் கல்லாமையின் கனபரிமாணங்களைப் பற்றியும் உயர்மட்டத்தில் இருப்பவர்கள் உணரவேண்டும். தேசத் தலைவர்கள் கல்லாமைக்கு ஒரு முடிவுகாண வேண்டும். நாட்டின் வாழ்க்கைத் தரத்திற்கும், சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் கல்லாமை பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இச்சூழலில் நாடு தழுவிய சீரான நிலையான ஒரு பிரசார இயக்கம் கல்லாமையை ஒழிப்பதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறது. இப் பிரச்சினை குறித்து மக்கள் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் இந்தப் பிரசாரம் தேசிய வாழ்க்கைக்கு முக்கியமானது என்ற நம்பிக்கையில் சமூகத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் பொறுப்பேற்கவேண்டும். மத்திய மாநில அரசுகள், தொண்டு நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் படித்தவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்காற்றவேண்டும். குறைந்தபட்ச ஈடுபாட்டுடன் வேலை செய்தால் இத்திட்டம் வெற்றி பெறுவது கடினம். இது முழுமையான பொறுப்புள்ள திட்டம். தியாகம், கற்பனைத்திறன் மற்றும் அறிவுப்பூர்வமான ஒத்துழைப்பு இவையாவும் இத்திட்டத்திற்குத் தேவைப்படுகின்றன.

எப்படியும் இந்த இலக்கை அடைந்துவிடமுடியும். சோவியத் நாட்டில் இத்திட்டம் வெற்றி கண்டுள்ளது. அங்கு சமூக வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதில் மக்கள் அதிக அக்கறைகாட்டத் தலைப்பட்டனர். இந்தியாவில் நிலைமை வேறாக உள்ளது. ஆனால் மிகவும் சக்திவாய்ந்த முயற்சி எடுத்தால் நிச்சயம் சோவியத் நாட்டைப் போல் நம் நாடும் ஒரு இலக்கை அடைந்துவிட முடியும்.

உலக அரங்கில் எழுத்தறிவின் நிலை

பதினைந்து வயதிற்கு மேற்பட்டுள்ள எழுத்தறிவற்றவர்கள் உலகில் *948.1* மிலியனாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் பொருளாதாரத்தில் வளர்கின்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, எழுத்தறிவு கொடுக்கும் பணி உலக அரங்கில் *1965* முதலே தொடங்கப்பட்டுவிட்டது. டெஉறானில் கூடிய உலகக் கல்வி அமைச்சர்கள் மாநாடு எழுத்தறிவின் தேவையை முதன்முதலாக விரிவாக விவாதித்தது. அதில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்கள் *8* ஆம் நாளை அகில

உலக எழுத்தறிவு தினமாகக்' கொண்டாட வேண்டும் என்று ஐ.நா.சபை 1965 இல் அறிவித்தது. இந்த நாளைக் கொண்டாடுவதின் நோக்கமே எழுத்தறிவின்மையை அகற்ற மக்களை ஒன்று திரட்ட வேண்டும் என்பதாகும்.

சோவியத் சோசலிச குடியரசுகள், பர்மா, கியூபா, வியட்நாம், நிகரகுவா, தான்சானியா, எத்தோப்பியா முதலிய நாடுகள் எழுத்தறிவில் நூறுசதவிகித இலக்கினை ஏற்கெனவே எட்டியுள்ளன.[2] சீனா, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், நைசீரியா, இந்தோனிசியா, பிரேசில், எகிப்து, ஈரான் முதலிய நாடுகள் முழு எழுத்தறிவைப் பெற மிகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன.[3]

இப்பொழுது உலக நாடுகள் பலவும் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன. இந்த முன்னேற்றத்திற்கு மூலக் காரணம் கல்வி அறிவுதான். உலகிலேயே பெரிய நாடான ருசியாவில் 70 சதவிகித மக்கள் கல்வியறிவு பெறாமல் இருந்தனர். 1939 இல் 87.4 சதவிகிதம் பேர்கள் எழுத்தறிவு பெற்றதாகத் தெரிகிறது. 1919 இல் கல்வி கொடுப்பதற்கான அத்திட்டம் தொடங்கப்பட்டு, இருபது ஆண்டுகள் முடிந்த பிறகுதான் முழு எழுத்தறிவு வெற்றி பெற்றது. அன்றையத் தலைவர் திரு. லெனின் இதை எட்டு ஆண்டுகளில் சாதித்து விடலாம் என்று நினைத்தார். அதற்கான தனிச் சட்டங்களும் இயற்றப்பட்டன. 'எழுத்தறிவைப் பெறாதவர்கள் பெரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்' எனவும் அறிவிக்கப்பட்டது.

அட்டவணை-1 கீழ்க்கண்ட அட்டவணையில் பல நாடுகளின் மக்கள் தொகையும் எழுத்தறிவு நிலையும் கொடுக்கப்பட்டுள்ளன

வ.எண்.	நாடுகள்	மக்கள் தொகை (மிலியனில்)	எழுத்தறிவு நிலை
1.	யு.எஸ்.எஸ்.ஆர்	286.7	100%
2.	பர்மா	39.84	100%
3.	கியூபா	10.24	100%
4.	வியட்நாம்	64	100%
5.	நிகரகுவா	3. 5	100%
6.	தான்சானியா	23.2	100%
7.	எத்தோப்பியா	46	100%
8.	சீனா	1180	80%
9.	பாகிஸ்தான்	84.25	35%
10.	வங்காளதேசம்	87	36%
11.	யு . கே.	55.78	97%
12.	யு.எஸ்.ஏ	245.8	97%
13.	இந்தியா	844.3	52.11%

இந்தியாவில் எழுத்தறிவுத் திட்டங்கள்

1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 52.11 ஆக உள்ளது. தமிழ் நாட்டின் எழுத்தறிவு நிலை 63.72 சதவிகிதமாகும். இது இந்தியாவில், மாநில அளவில் இரண்டாவது நிலை, இந்தியாவில் எழுத்தறிவு வளர்ச்சி 1981 இல் 234 மிலியனாக் இருந்து, 1991 இல் 352 மிலியனாக அதிகரித்துள்ளது. அதே சமயத்தில் எழுத்தறிவு பெறாதவர்களின் எண்ணிக்கை 302 மிலியனிலிருந்து 324 மிலியனாக வளர்ந்துள்ளது. இது கடந்த பத்து ஆண்டில் சொற்ப வளர்ச்சியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்புத் தரவுகளை ஆராயும்பொழுது எழுத்தறிவின் வளர்ச்சி 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதே சமயத்தில் எழுத்தறிவு பெறாதவர்களின் வளர்ச்சி 7 சதவிகிதமாகவே உள்ளது. கடந்த சில கணக்கெடுப்புகளில் 9 வயது நிரம்பாத குழந்தைகள் எழுத்தறிவு பெறாதவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளனர். 1991 கணக்கெடுப்பில், 7 வயதுக்கு மேற்பட்டுள்ள குழந்தைகளை எழுத்தறிவு பெற்றவர்கள் பட்டியலில் கணக்கிட்டுள்ளனர்.[4]

இன்றையச் சூழலில், எழுத்தறிவுத் திட்டம் 7 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எழுத்தறிவு கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. 1951 மற்றும் 1971 கணக்கெடுப்புகளில் எழுத்தறிவு சதவிகிதம், 5 வயது நிரம்பாதவர்களை உள்ளடக்கிக் கணக்கிடப்பட்டு உள்ளது. 1961 மற்றும் 1991 கணக்கெடுப்புகளில் 7 வயது முதல் எழுத்தறிவு சதவிகிதம் கணக்கிடப்பட்டது. இக்கணக்கெடுப்பில் 5 வயது முதல் எழுத்தறிவு சதவிகிதம் கணக்கிடப்பட்டால் 1981 இல் எழுத்தறிவு பெற்றவர்கள் 41.42 ஆகியிருப்பார்கள். இதில் ஆண்கள் 53.45%, பெண்கள் 28.46% எழுத்தறிவின் வளர்ச்சி விகிதம் 1981 - 91இல் 50% ஆக உயர்ந்து உள்ளது. 7 வயது முதல் உள்ள மக்கள் தொகையில் எழுத்தறிவு உயர்வு 1981 - 91 இல் 9.55% கடந்த பத்தாண்டு கணக்கெடுப்புகளை நுண்மையாக ஒப்பிட இயலவில்லை. மேலும் ஓரளவு ஒப்பிடுகையில், எழுத்தறிவு நிலை இந்தியாவில் ஒவ்வொரு பத்தாண்டிலும் உயர்ந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதிலும் முந்தைய பத்து ஆண்டுகளைவிட அடுத்த பத்தாண்டுகளில் உயர்வு இருப்பது தெரிகிறது. 1981 - 91 இல் எழுத்தறிவு உயர்வு 8.55% உள்ளது. 1971 - 81 ஐக் காட்டிலும் இது கூடுதலாக இருக்கிறது (6.97%). 1961 - 62 இல் எழுத்தறிவு உயர்வு 6.14% கடந்த பத்து ஆண்டுகளில் 118.13 மிலியன் நபர்கள் எழுத்தறிவு பெற்றார்கள். அதே சமயத்தில், 21.10 மிலியன் நபர்கள் எழுத்தறிவு பெறாதவர்களாக இருக்கிறார்கள். எழுத்தறிவு பெறாதவர்களில் 5.79 மிலியன் ஆண்கள், 16.31 மிலியன் பெண்கள் ஆவர்.[5]

இந்தியாவில், எழுத்தறிவில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது கேரளாதான். இதன் எழுத்தறிவு விகிதம் 91%. எழுத்தறிவு நிலையில் கடைசியாக இருப்பது பீகார் மாநிலம். இதன் எழுத்தறிவு நிலை 38 • 54%

ஆந்திரப்பிரதேசம், அருனாசலபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம், மேகாலயா, ஒரிசா, ராசஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்கள் எல்லாம் தேசிய எழுத்தறிவுச் சராசரிக்கும் கீழாக உள்ளன.

கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்கள் நூறு சதவிகித எழுத்தறிவு நிலையினை அடைந்ததைத் தொடர்ந்து, தமிழகத்தில் முதல் கட்டமாக பசும்பொன், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டம், 'அறிவொளித் திட்டம்' என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. இரண்டாவது கட்டமாக, திருநெல்வேலி கட்டபொம்மன், மதுரை, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் நூறுசதவிகித எழுத்தறிவுத் திட்டங்கள் (அறிவொளித் திட்டம்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுத்தறிவை வரலாற்று அடிப்படையில் அணுகினால், ஒவ்வொரு காலத்திலும் அதன் தேவை வெவ்வேறு விதமாக இருந்து வந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. அதனால் எழுத்தறிவு ஒரு பிரச்சினையும் அல்ல, விடிவும் அல்ல என்று மேலை நாடுகள் கருதுகின்றன. அதே சமயத்தில் வளர்ச்சிப் பாதையில் பார்த்தால், மூன்றாம்தர நாடுகள், எழுத்தறிவு வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. எழுத்தறிவு சமுதாய வளர்ச்சிக்கே என்பதை யுனஸ்கோவும் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே எழுத்தறிவின்மைக்கும் ஏழ்மைக்கும் தொடர்பு இருக்கிறது. எழுத்தறிவின்மைக்கும் சமூக தேக்க நிலைக்கும் தொடர்பு இருக்கிறது. வளர்கின்ற நாடுகளில் எழுத்தறிவின்மை, சமுதாயப் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிக்கிறது, எழுத்தறிவின்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினைப் புறக்கிணிக்கிறது என்பதை யுனஸ்கோ நிறுவனம் வலியுறுத்திக் கூறிவருகிறது. மூன்றாம்தர நாடுகள் எழுத்தறிவை 'உலக வளர்ச்சி'யாகக் கருதுகின்றன. இந்தியாவில் எழுத்தறிவு, தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது. எழுத்தறிவின் மூலமே தனிமனித வளர்ச்சிக்கு வேண்டிய அறிவு கிடைக்கிறது. தனிமனித வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாகும்.

எனவே, முழு எழுத்தறிவை நோக்கி இந்தியா நடைபோடுகிறது. அதற்காக மக்கள் எழுத்தறிவு இயக்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. கியூபா, எத்தோப்பியா, நிகரகுவா, தான்சானியா போன்ற நாடுகளில், எழுத்தறிவு ஒரு 'முகாம் அணுகுமுறை'யாகக் கையாளப்பட்டு வெற்றி பெற்றுள்ளது.

இந்தியாவில், எர்ணாகுளம் மற்றும் பாண்டிச்சேரியில் கிடைத்த அனுபவங்களும், எழுத்தறிவுக்கும் 'முகாம் அணுகுமுறை' அவசியம் என்பதை உணர்த்தி உள்ளன. இம்முறையினால் பள்ளியில் குழந்தைகளின் சேர்க்கை அதிகரித்துள்ளது. குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது; குழந்தை நலம் மற்றும் நோய் தடுப்புப் பெரிதும் பாதுகாக்கப்படுகின்றன. சிறு குடும்ப முறையை மேற்கொள்ளவும் மக்கள் பெருக்க விகிதத்தைக் குறைக்கவும்

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, தன்னம்பிக்கை வளர்ந்து வருகிறது. *1990* அனைத்துலக எழுத்தறிவு ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட முகாம் அணுகுமுறை (Campaign-approach) யில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மக்களை எழுத்தறிவுத் திட்டத்தில் ஈடுபடச் செய்தல், அடித்தளம் வரையில் செயல்முறையினை முடுக்கிவிடுதல், அனைத்துலக ஒற்றுமையைக் காத்தல், எழுத்தறிவு இன்மையைப் போக்குதல் போன்ற குறிக்கோள்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இருபதாம் நூற்றாண்டு முடிவுக்குள் 'முழு எழுத்தறிவைப்' பெறுதலையே இம்முறை முதல் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவருகிறது.

இந்தியாவில் முழு எழுத்தறிவைப் பெறுவதற்காக *1978* ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் *2* ஆம் நாள் தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தில் மைய முறையே பின்பற்றப் பட்டது. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் முப்பதின்மருக்கு ஓர் ஊக்குநர் என்ற விகிதத்தில் ஒரு மையத்தை ஏற்படுத்தி எழுத்தறிவு கொடுப்பது; இந்த முறையைப் பின்பற்றி மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டம், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத்திட்டம் மற்றும் தொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் நேரு இளைஞர் மன்றங்கள் போன்றவை அத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டன.

மேலும், *1986* ஆம் ஆண்டு முதல் மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், படித்த ஒவ்வொருவரும் எழுதப்படிக்கத் தெரியாத ஒருவருக்குக் கற்பிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது. தற்போது இத்திட்டத்தின் மூலம் ஒருவர் அதிகபட்சம் ஐந்து நபர்களுக்குக் கற்றுத்தாவேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. மக்கள் எழுத்தறிவுத் திட்டத்தில் ஒரு நபரை எழுத்தறிவு பெற்ற நபராக்க ரூ.*50/-* மட்டுமே செலவிடப்படுகிறது. இது மைய முறையைக் காட்டிலும் குறைவானது என்பது தெரியவந்துள்ளது.[6] மைய அடிப்படையிலான அணுகுமுறையில், கற்பிக்கும் ஊக்குநருக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது. இது ஓராண்டு காலம் நீடித்தது. இம்முறையில ஒரு நபரை எழுத்தறிவு பெற்றவராக்க ரூ. *160/-* செலவிடப்படுகிறது. மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தில் கற்பிப்பவர் தொண்டு உள்ளத்துடன் கற்பிக்கிறார். மேலும் இத்திட்டம் ஆறுமாத காலமே செயல்பட வேண்டியுள்ளது.

மைய அடிப்படையிலான அணுகுமுறை மற்றும் மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் மூலமாக நடைபெற்ற திட்டங்கள் மூலம் பயன் பெரிதும் இருந்தபோதிலும், எந்தக் குறிப்பிட்ட பகுதியும் நூறு சதவிகித எழுத்தறிவினைப் பெற இயலவில்லை. இச்சூழ்நிலையில்தான் தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம் *1 . 5 . 1988* அன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் நூறு சதவிகித எழுத்தறிவைக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. முதல் முறையாகப் பாரத அறிவியல் கல்விக் கழகத்திடம் இப்பொறுப்பு கொடுக்கபட்டது. அந்த அமைப்பின் மூலம் இந்தியாவில் *50C*

மாவட்டங்களில் *1990* ஆம் ஆண்டில் கலைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இக்கலைப்பயணத்தின் நோக்கம் கல்லாமையை இல்லாமை ஆக்குவது; 'அதற்காக மக்களை விழிப்படையச் செய்வது', 'கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்கு ஆர்வமூட்டுவது' பின்னர் 'எழுத்தறிவைக் கொடுப்பது' ஆகியவை ஆகும். இத்திட்டமே தமிழகத்தில் 'அறிவொளி இயக்கமாகப்' பின் நாட்களில் திகழ்ந்து வருகிறது. கேரளத்திலுள்ள எர்ணாகுளம் என்ற மாவட்டத்தில்தான் முதன்முதலில் மக்கள் எழுத்தறிவியக்கம் ஒன்று தோன்றி வெற்றி பெற்றது. கேரள மாநிலம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக *18 . 4 . 1991* அன்று அறிவிக்கப்பட்டது. பின்னர் *30 . 11 . 91* அன்று புதுவையில் 'முழு எழுத்தறிவு' வெற்றி விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில், புதுவை மாநிலம் முழு எழுத்தறிவு பெற்றதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

1987 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் *2* ஆம் நாள் 'மக்கள் அறிவியல்' இயக்கம் அறிவியலைப் பரப்பும் பொருட்டு மேற்கொண்ட அறிவியல் கலைப் பயணம் மாபெரும் வெற்றி கண்டது. பல்லாயிரக்கணக்கில் தன் ஆர்வமுள்ள விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், எல்லோரும் *2500* கிலோ மீட்டர் தொலைவு நடந்து நவம்பர் திங்கள் *7* ஆம் நாள் போபாலில் கூடினர். இந்தக் கலைப் பயணத்தின் பின்னணியில் கேரள சாஸ்திர சாகித்திய பரிசத்து முக்கிய இடம் பெறுகிறது. பாரத கல்வி அறிவியல் கலைப் பயணத்தின் வழி (Bharat Gyan Vigyan Jatha) தேசிய ஒற்றுமை மற்றும் சுயசார்பு பெற அறிவியல் மற்றும் எழுத்தறிவை ஊட்டுவது என்று மைய நேக்கமாக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு அக்டோபர் *2* முதல் நவம்பர் *14* ஆம் நாள் வரை மேற்கொள்ளப்பட்ட 'பாரதக் கல்வி அறிவியல் கலைப்பயணம்' இந்தியாவில் *500* மாவட்டங்களில் நடத்தப்பெற்றது. இந்தக் கலைப் பயணத்தில் எழுத்தறிவின் அவசியம் பற்றி மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. நாட்டுப்புறப் பாடல்கள் மூலமும், நாடகங்கள் மூலமும் மக்களிடையே, எழுத்தறிவின் தேவை வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலேயே கேரளம் மற்றும் புதுவை மாநிலங்கள் முழு எழுத்தறிவுத் திட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன. இந்த வெற்றிக்குக் காரணம், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுதான். இதுவரையில் எழுத்தறிவுத் திட்டத்திற்குக் கிடைக்காத மக்கள் ஒத்துழைப்பு இப்பொழுது கிடைத்துள்ளது.

தமிழ்நாட்டில் 'தமிழ் நாடு அறிவியல் இயக்கம்' முழு எழுத்தறிவைக் கொடுக்க தன்முனைப்போடு இறங்கியுள்ளது. இந்திய அரசும், தமிழக அரசும் தன்னார்வ இயக்கங்களோடு சேர்ந்ததுதான் முழு எழுத்தறிவைப் பெற இயலும் என்பதை உணர்ந்துள்ளன. எனவே, தமிழ்நாட்டில் முழு எழுத்தறிவைக் கொண்டுவரத் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் அரசுடன் இணைந்து செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் *15* வயது முதல் *35* வயதுக்குட்பட்ட எழுதப்

படிக்கத் தெரியாதவர்கள் இன்னும் 78 இலட்சம் நபர்கள் இருக்கிறார்கள். 1995 ஆம் ஆண்டிற்குள் இவர்களுக்கு எழுத்தறிவு கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொண்டர்கள் மூலம் எழுத்தறிவினைக் கொடுப்பதற்குத் தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம் (National Literacy Mission) ஒரு நபருக்கு ரூ.65/- வரை செலவிட நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தச் செலவினத்தை 2:1 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன.[7]

அனைத்துப் பகுதி மக்களையும் இணைத்து இதுவரை எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இப்பொழுது மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களின் ஈடுபாட்டோடு அது நடக்கிறது. இந்தியாவில் சுமார் 178 மாவட்டங்களில் முழு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முடிந்துள்ளது. தமிழ்நாட்டில் முழு எழுத்தறிவுத் திட்டம், கன்னியாகுமரி, பசும்பொன், காமராசர், புதுக்கோட்டை, வடஆற்காடு, கட்டபொம்மன் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வெற்றி கண்டுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற இத்திட்டத்திற்கு 'அறிவொளி இயக்கம்' என்று பெயர். இவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ள அறிவொளி இயக்க ஆசிரியர்களுக்கு எவ்வித ஊக்கத்தொகையும் வழங்கப்படுவதில்லை. தொண்டு உள்ளம் படைத்தவர்கள் மட்டுமே இப்பொழுது பங்கு பெறுகிறார்கள். ஒவ்வொரு அறிவொளி இயக்க ஆசிரியரும் குறைந்தபட்சம் பத்து கற்போர்களுக்கு 6 மாதங்களுக்கு எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் விழிப்புணர்வு பற்றிய பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். தமிழ் நாட்டில் எழுத்தறிவின் இன்றைய நிலை 63.7% இதில் ஆண்கள் எழுத்தறிவு நிலை 74.88% பெண்கள் எழுத்தறிவு நிலை 52.29%. 1901 இல் தமிழ்நாட்டில் எழுத்தறிவு நிலை 7% தற்போது உள்ள நிலையை ஒப்பிடுகையில் ஒரு பெரிய வளர்ச்சியாக இதைக் கருத வாய்ப்புண்டு. மேலும் 1990 இல் (அகில உலக எழுத்தறிவு ஆண்டில்) தமிழ்நாடு அறிவியல் இயக்கம், அக்டோபர் திங்கள் 2 முதல் நவம்பர் 14 ஆம் நாள் வரை நடத்திய எழுத்தறிவுக் கலைப் பயணம் மக்கள் மத்தியில் எழுத்தறிவின் தேவையை உணர்த்தியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மக்கள் இயக்கம் ஏன்?

முந்தையத் திட்டங்கள் எழுத்தறிவு கொடுப்பதில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. காரணம் கற்றல் சூழலையும் கற்போரின் தேவையையும் அது உருவாக்கவில்லை. அறிவொளித் திட்டத்தில் மக்களைத் திரட்டக் கலைப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் ஒருங்கிணைந்த சமுதாய முயற்சி இருப்பதால் மக்கள் இதைத் தங்கள் திட்டமாகவே காண்கின்றனர்.

எர்ணாகுளம் மாவட்டத்தில்தான் முதன்முதலில் மக்கள் எழுத்தறிவு இயக்கம் தோன்றி வெற்றி பெற்றது. பின்னர், 'சாட்சரதா' என்று கேரள

மாநிலம் முழுவதற்குமான எழுத்தறிவு இயக்கமும், பாண்டிச்சேரி அறிவொளி இயக்கமும் ஈட்டிய வெற்றிகள் எழுத்தறிவு இயக்கத்திற்கு முழு நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

அரசின் வளர்ச்சித் திட்டங்கள் சமூக பங்கேற்பு இல்லாததால் வெற்றி பெற முடியவில்லை. வளர்ச்சித் திட்டங்களில் மக்களை ஈடுபடுத்த வேண்டுமானால் கல்வியறிவு அவசியம் தேவைப்படுகிறது. சமூக மாற்றத்திற்கு எழுத்தறிவின் பங்கு இன்றியமையாதது ஆகும். எழுத்தறிவு இயக்கத்தால்தான் மக்கள் மத்தியில் உலகுபற்றிய ஒரு விஞ்ஞான கண்ணோட்டத்தை உண்டாக்க முடியும். மக்கள் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடவும், எழுத்தறிவு எண்ணறிவில் சுயசார்பு பெறவும் மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது.

பழையத் திட்டத்திற்கும் அறிவொளிக்கும் உள்ள வேறுபாடுகள்

பொதுவாக, பல்கலைக்கழகங்களில் செயல்படுகின்ற எழுத்தறிவுத் திட்ட முறைகள் தற்போது மாற்றி அமைக்கப்படுகின்றன. முன்பெல்லாம் மையம் அமைத்து *30* கற்போர்களுக்கு *1* பயிற்றுநர் என்ற வகையில் ஓராண்டிற்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அந்த முறையில் காலமும் நேரமும், அதிகம் செலவிடப்பட்டதால் அம்முறை தற்போது கைவிடப்பட்டு மக்கள் எழுத்தறிவுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. (Mass Literacy Programme) இம்முறையில் மாணவர்கள் தொண்டாகள நிலையிலிருந்து அடிப்படையில் சொல்லிக்கொடுக்கின்றனர். இம்முறையில் *120* மணி நேரத்தில் ஒருவருக்குக் கற்பிக்கப்படுகிறது. பணச்செலவும் அதிகமில்லை. அதே நேரத்தில், இம்முறையிலும் சிக்கல் வந்தது; ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்து முடிக்க வாய்ப்பில்லாமல் போனது. ஏனென்றால் மணவர் ஆசிரியர்கள் என்ற நிலையில் திட்டத் தொடர்ச்சியும்; (Continuity) ஒருங்கிணைப்பும் (Co-ordination) செய்ய முடிவதில்லை. மேலும், மேற்கண்ட எல்லா முறைகளிலும் ஒரு பெருங்குறையுள்ளது. கற்போர்களைத் திரட்ட முடிவதில்லை. அதாவது கற்போர்களுக்கு ஆர்வமுட்ட (Motivation) அத்திட்டங்களில் வழிவகை சரியாகச் செய்யப்படவில்லை. இக்குறைகளைக் களைய வந்ததுதான் முழு எழுத்தறிவுத் திட்டம் (Total Literacy Campaign). இதில் எழுத்தறிவுப் பணி ஒரு இயக்கமாகவே நடைபெறுகிறது (Movement). தற்போது தமிழ் நாட்டில் அறிவொளி இயக்கம் என்ற பெயரில் எழுத்தறிவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் படிப்பதற்கு மக்கள் பெரிதும் வருகிறார்கள். புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் இது சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது.

தமிழ் நாட்டில் எழுத்தறிவு இயக்கங்கள்

எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்ந்த மத்திய அரசு *1988* இல்

மேத்திங்கள் *5* ஆம் நாளில் தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கத்தைத் துவக்கியது. *1986* இல் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையில் எழுத்தறிவின்மையை அகற்றுதல் பற்றிய ஒரு தனி அத்தியாயம் வரையப் பட்டது. இதன் அடிப்படையில்தான் *1988* இல் அப்பொழுது இருந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியால் அவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வியக்கத்தின் நோக்கம் *1990* இக்குள் *3* கோடி பேருக்கும் *1995* இக்குள் *5* கோடி பேருக்கும் எழுத்தறிவு கொடுப்பது ஆகும்.

தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கங்கள் *1991* ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. கேரளாவிலுள்ள எர்ணாகுளம் மாவட்டத்தில்தான் முதன்முதலில் மக்கள் எழுத்தறிவுத் திட்டம் 'சாட்சரதா' என்ற பெயரில் *1989* ஆம் ஆண்டில் வெற்றி கண்டது. பின்னர் புதுச்சேரி அறிவொளி இயக்கம் *(1990* இல்*)* பெற்ற வெற்றிகள் எழுத்தறிவு இயக்கத்திற்கு முழு நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கல்வியறிவில்லாத *9* வயது முதல் *35* வயது வரை உள்ளவர்கள் அனைவரையும் ஏப்ரல் திங்கள் *1992* இக்குள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மாற்றுவது புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. அப்பொழுது அம்மாவட்டத்தில் சுமார் *2,90,000* கல்லாதவர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருந்தது. *23.07.1991* முதல் துவங்கிய இவ்வறிவொளித் திட்டம் ஓராண்டு முடிந்து *14.04.1992* அன்று வெற்றி விழா கொண்டாடியது. இத்திட்டத்திற்கான கற்பிக்கும் பணி *2 . 10 . 91* அன்று முதல் தொடங்கி ஆறுமாதக் காலத்திற்கு எழுத்தறிவைக் கொடுத்தது இதே காலத்தில், அறிவொளி இயக்கங்கள் காமராசர் மாவட்டத்திலும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலும் தொடங்கப்பட்டன. பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இவ்வியக்கம் *1991* ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் சக்தி மகத்தான சக்தியாகும் அதைக்கொண்டு எவ்வளவு பெரிய காரியத்தையும் சுலபமாகச் சாதிக்க முடியும் என்பதைத் தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கங்கள் நிரூபித்துள்ளன. எர்ணாகுளம், புதுச்சேரி, மிட்நாபூர், பீஜப்பூர் முதலிய இடங்களில் அறிவொளி கண்ட வெற்றி இங்கு நினைவு கூரத்தக்கது. அறிவொளி ஒரு மக்கள் இயக்கமாக மாறிவிட்டது.

இதில் முழுமையான மக்கள் பங்கேற்பு இருக்கிறது
எல்லாத் தரப்பினரும் இதில் கலந்து கொள்கிறார்கள்
முதன்மையாக, இது தொண்டர் அடிப்படையுடையது.
மகிழ்ச்சியை மக்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்
தெளிவான நோக்கமும் எதிர்பார்ப்பும் இதன் பரவசமான விளைவுகள்

அரசுத் துறையினரின் நெருங்கிய ஒத்துழைப்பு,
மிகுந்த ஈடுபாடும் உழைப்பும்
பங்கேற்பாளரின் மாறிய அணுகுமுறை
தன்னம்பிக்கை போன்ற உண்மைகள் இவ்வியக்கத்தில் வெளிப்படுகின்றன.

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கத்தின் பொது எதிர்பார்ப்புகள்

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம் *1995* இக்குள் *15 - 35* வயதில் இருக்கும் *8* கோடி மக்களுக்குச் செயல்முறை எழுத்தறிவைக் கொடுக்க முனைந்துள்ளது.

எழுத்தறிவு மற்றும் எண்ணறிவில் சுயசார்பு அடைதல்,
தங்களின் பாதிப்புகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றில் இருந்து விடுபடவேண்டி, அமைப்பு ரீதியான பங்கேற்பு முறையைக் கைபாளுதல்,
சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான திறன்களைப் பெறுதல்,
தேசிய ஒருமைப்பாட்டை, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், பெண்களின் சமத்துவத்தைப் பேணல், சிறுகுடும்ப நெறியைக் கடைபிடித்தல்.

நோக்கீடு

1. தமிழ்ப்பொழில், தமிழாராய்ச்சித் திங்களிதழ், மே - ஜுன், *1991*, தஞ்சாவூர்.
2. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ், ஜுன், *1991*, புதுதில்லி.
3. எழுத்தறிவு முனைப்பு இயக்க மாத இதழ், செப்டம்பர், *1991*, புதுதில்லி.
4 " " "
5. " " "
6. எல்லோருக்கும் எழுத்தறிவு - நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டம் *மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம்*, அக்டோபர், *1991*, சென்னை
7. இந்து நாளேடு *2 . 12 . 91* - *2000*இக்குள் எழுத்தறிவு முடியுமா?

தரவுகள் சேகரித்தலும் பரிசோத்த முறையும்:

கள ஆய்வு மேற்கொண்ட பகுதி

இந்த ஆய்விற்கான களப்பணி முழுவதும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தர்வகோட்டை ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. புதுக்கோட்டை மாவட்ட அறிவொளியில் பயன்பெற்ற கற்போர்கள் *195* நபர்கள் இவ்வாய்விற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். கந்தர்வகோட்டை ஒன்றியப் பகுதிகளில் மொத்தம் மக்கள் தொகை *71,081* ஆகும். இதில் அறிவொளியில் சேர்ந்து பயன்பெற்றவர்கள் *13,100*. இந்த ஆய்விற்காக எடுத்துக்கொண்ட நபர்கள் *1·5* சதவிகிதமே. ஏகபோக பிரதிநிதித்துவ அடிப்படையில் தகவலாளிகள் பெறப்பட்டனர். வேலையின் காரணமாய் இந்தப் புதிய கற்போர்கள் (Neo-literates) வேறு இடங்களுக்குச் சென்றுவிடுவதால், களப்பணி மேற்கொண்டபொழுது ஊரில் இருந்த நபர்களிடம் மட்டுமே தேர்வு நடத்தப்பெற்றது.

கந்தர்வகோட்டை ஒன்றியப் பகுதிகளில் உள்ள *23* ஊர்களில் களப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான களப்பணி *40* நாட்களில் *1993* பிப்ரவரி, மார்ச்சு திங்கள்களில் மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வின் பொழுது *28* ஆண்களும், *165* பெண்களும் மதிப்பீட்டுத் தேர்வில் கலந்துகொண்டனர் இவ்வாய்விற்கான வினாப்பட்டியல் கற்போர்களிடம் கொடுக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு நாளும் இரவு நேரங்களில் *7/8* கற்போர்களை அழைத்து மதிப்பீடு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி கற்போர்கள் கிடைப்பதில்லை என்பது இக்கள ஆய்வில் கண்டறிந்த ஒரு செய்தியாகும். முடிந்தவரையில் அந்த ஒன்றியப் பகுதியின் அறிவொளித் துணைத் திட்டப்பகுதிகள் அனைத்திலும் கள ஆய்வு செய்யப்பட்டது.

களஆய்வு மேற்கொண்ட ஊர்களும் வரைபடமும்

கந்தர்வகோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள *13* ஒன்றியங்களில் ஒன்றாகும். இவ்வொன்றியத்தில் *7* அறிவொளித் துணைத் திட்டப்பகுதிகள் இருக்கின்றன. அவை முறையே, *1.* கந்தர்வகோட்டை, *2.* வீரடிப்பட்டி, *3.* நச்சங்குறிச்சி, *4.* புனக்குளம், *5.* குளத்தூர் நாயக்கன்பட்டி, *6.* மங்கனூர் மற்றும் *7* வேலாடிப்பட்டியாகும். இந்த ஒன்றியத்தில் மொத்தம் *36* பஞ்சாயத்து கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு அறிவொளித் துணைத்திட்டப் பகுதியிலும் *5/6* பஞ்சாயத்துக் கிராமங்கள் உள்ளன. தரவுகள் எல்லாப் பகுதியிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் அவ்வொன்றியத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பகுதிகளை * குறியீட்டால் காணலாம். மேலும் அவ்வொன்றியத்திலுள்ள மக்கள் தொகை மற்றும் அறிவொளியில் பயன்பெற்றோர் எண்ணிக்கையை அட்டவணை இரண்டு மற்றும் மூன்றில் காணலாம்.

வினாப்பட்டியல்

அறிவொளி இயக்கத்தில் பயன்பெற்ற *193* நபர்களை மதிப்பீடு செய்யப் பாடப்புத்தகத்தை ஒட்டிய ஒரு வினாப்பட்டியல் ஐந்து பக்க அளவில தயாரிக்கப்பட்டது. அந்த மதிப்பீட்டுத் தாளில் *100* மதிப்பெண்கள் பெற வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. படிப்பறிவுக்கு *40* மதிப்பெண்களும், எழுத்தறிவுக்கு *30* மதிப்பெண்களும், எண்ணறிவுக்கு *30* மதிப்பெண்களும் ஒதுக்கப்பட்டன. அதைத் தவிர்த்து, தகவலாளியின் பொதுச்சூழலை அறியவும் வினாக்கள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு கற்போருக்கும் ஒரு மதிப்பீட்டுத்தாள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரும் *2 – 3* மணி நேரங்களில் அந்த மதிப்பீட்டுத் தாள்களை நிறைவு செய்து கொடுத்தனர். மாதிரி வினாப்பட்டியல் இத்துடன் இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

(பிற்சேர்க்கை - 1)

அட்டவணை-2 கந்தர்வகோட்டை ஒன்றியம்: 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி

	ஆண்	பெண்	மொத்தம்	அறிவொளியில் சேர்ந்தவர்கள் ஆண்	அறிவொளியில் சேர்ந்தவர்கள் பெண்	பயன்பெற்றவர்கள் ஆண்	பயன்பெற்றவர்கள் பெண்
மக்கள்தொகை	35,876	36,081	71,081				
படித்தவர்கள்	18,873	9,914	28,787				
படிக்காதவர்கள் எல்லாவயதிலும்	17,003	26,117	43,120				
படிக்காதவர்கள் 9-45 வயதில்	7,586	13,405	20,991	5592	11773	4332	8768
				17,365		13,100	

* அறிவொளி மதிப்பீடு-9 முடித்தவர்கள் - 13,100

* அறிவொளி வகுப்புகளை முடித்தவர்கள் 62.40 சதவிகிதத்தினர்; இவர்களின் தேர்ச்சி நிலை 80.62 சதவிகிதமாகும்.

அட்டவணை - 3 கந்தர்வகோட்டை ஒன்றியம்: புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்க துணைத்திட்டப்பகுதி

துணைத்திட்டப்பகுதி	பஞ்சாயத்து - ஊர்		அறிவொளியில் பயன்பெற்றவர்கள் ஆண்	பெண்	மொத்தம்
1. கந்தர்வகோட்டை	1.	கந்தர்வகோட்டை	77	494	571
		கொத்தகம்	22	192	212
	2.	காட்டு நாவல்	187	247	434
		காட்டுநாவல்(த.ப)	160	180	340
		துலுக்கன்பட்டி	-	-	-
		வெட்டிக்காடு	-	-	-
	3.	சுந்தம்பட்டி	104	392	496
		சுந்தம்பட்டி (த.ப)	39	134	173
		கொல்லம்பட்டி	-	-	-
		மருங்கூரணி	-	-	-
		ராசாப்பட்டி	-	-	-
		பெருச்சு வண்ணியம்பட்டி	-	-	-
		அம்மாபுதுப்பட்டி	-	-	-

	4.	மட்டங்கால்	*81*	*346*	*427*
		மட்டங்கால் *(த.ப)*	*36*	*229*	*265*
2. வீரடிப்பட்டி	*1.*	அக்கச்சிப்பட்டி	*21*	*85*	*106*
		அக்கச்சிப்பட்டி*(த.ப)*	*10*	*39*	*49*
	2.	பிசானத்தூர்	*43*	*137*	*180*
		பிசானத்தூர் *(த.ப)*	*15*	*43*	*58*
	3.	வீரடிப்பட்டி	*202*	*252*	*454*
		வீரடிப்பட்டி *(த.ப)*	*134*	*129*	*163*
	4	புதுப்பட்டி	*79*	*243*	*327*
		புதுப்பட்டி *(த.ப)*	*46*	*168*	*214*
		மல்லியநத்தம்	-	-	-
		வேம்பன்பட்டி	-	-	-
		சிவந்தான்பட்டி	-	-	-
	5.	கல்லாக்கோட்டை	*163*	*302*	*465*
		கல்லாக்கோட்டை*(த.ப)*	*124*	*193*	*317*
		புதுவயல்	-	-	-
		பந்துவாக்கோட்டை	-	-	-
		இடையன் கொல்லைப்பட்டி	-	-	-
		கண்ணுக்குடிப்பட்டி	-	-	-
		வாமடைக்கொல்லை	-	-	-
	6.	சங்கம் விடுதி	*154*	*273*	*427*
		சங்கம் விடுதி *(த.ப)*	*88*	*164*	*252*
		குறுவாண்டான்தெரு	-	-	-
		கரயவிடுதி	-	-	-
		சொக்கம்பேட்டை	-	-	-
		மணப்பட்டி	-	-	-
		வன்னிப்பட்டி	-	-	-
3. தச்சங்குறிச்சி	*1.*	தச்சங்குறிச்சி	*80*	*232*	*312*
		தச்சங்குறிச்சி *(த.ப)*	*61*	*188*	*249*
		சவரியார்பட்டி	-	-	-
	2.	நத்தமாடிப்பட்டி	*177*	*282*	*459*
		நத்தமாடிப்பட்டி *(த.ப)*	*95*	*139*	*234*
		கரியம்பட்டி	-	-	-
	3.	குறும்பூண்டி	*62*	*50*	*112*
		குறும்பூண்டி *(த.ப)*	*54*	*15*	*69*
		நாட்டாணி	-	-	-

	4.	நொடியூர்	88	129	217
		நொடியூர் (த.ப)	53	73	126
		சோளகன்பட்டி	-	-	-
	5.	விராலிப்பட்டி	172	314	486
		விராலிப்பட்டி (த.ப)	60	174	234
		கல்லூரப்பட்டி	-	-	-
		திராணிப்பட்டி	-	-	-
		வி.கொத்தம்பட்டி	-	-	-
4. புனக்குளம்	1.	புனக்குளம்	97	212	309
		புனக்குளம் (த.ப)	82	184	266
		தெத்துவாசல்பட்டி	-	-	-
		காடவராயன்பட்டி	-	-	-
	2.	அரியாணிப்பட்டி	110	248	358
		அரியாணிப்பட்டி (த ப)	80	210	290
		ஏ. கொத்தம்பட்டி	-	-	-
		கோரம்பட்டி	-	-	-
	3.	மஞ்சப்பேட்டை	75	114	189
		மஞ்சப்பேட்டை (த.ப)	46	76	122
		ஆணைநகர்	-	-	-
	4.	புதுநகர்	35	120	155
		புதுநகர் (த.ப)	20	106	126
	5.	துருசுப்பட்டி	59	99	158
		துருசுப்பட்டி (த.ப)	41	81	122
	6.	முதுகுளம்	60	157	217
		முதுகுளம் (த.ப)	132	10	142
		அச்சுதரபுரம்	-	-	-
		முக்கப்புடையான் பன்மை	-	-	-
5. குளத்தூர் நாயக்கன் பட்டி	1.	குளத்தூர்நாயக்கன்பட்டி	214	543	757
		குளத்தூர் நாயக்கன்பட்டி(த.ப)	180	392	572
		கோவில்பட்டி	-	-	-
		உலவயல்	-	-	-
		சினியார்குடிகாடு	-	-	-
		ஆத்தங்கரப்பட்டி	-	-	-
	2.	நடுப்பட்டி	279	518	797
		நடுப்பட்டி (த.ப)	189	286	475
		பருக்கைவிடுதி	-	-	-

	3.	பெரியக்கோட்டை	155	199	354
		பெரியக்கோட்டை(த.ப)	103	164	167
		மோகனூர்	-	-	-
		கொத்தகப்பட்டி	-	-	-
	4.	நம்பூரான்பட்டி	239	159	398
		நம்பூராண்பட்டி (த.ப)	160	117	277
		தின்னக்குளம்	-	-	-
		ஆண்டயுப்பட்டி	-	-	-
		வட்டகுளவாய்ப்பட்டி	-	-	-
	5.	பல்லவராயன்பட்டி	144	245	389
		பல்லவராயன்பட்டி (த.ப)	119	185	304
		பகட்டுவான்பட்டி	-	-	-
		கத்திரிக்காழி	-	-	-
6. மங்கனூர்	1.	மங்கனூர்	102	208	310
		மங்கனூர் (த.ப)	87	197	284
	2.	அரவம்பட்டி	75	146	221
		அரவம்பட்டி (த.ப)	59	54	113
	3.	வடுகப்பட்டி	149	85	234
		வடுகப்பட்டி (த.ப)	90	46	136
		வாண்டையான்பட்டி	-	-	-
	4.	சோமாபுரம்	118	429	547
		சோமாபுரம் (த.ப)	37	214	251
		சமுத்திரப்பட்டி	-	-	-
	5.	பழைய கந்தர்வகோட்டை	232	374	606
		பழைய கந்தர்வக் கோட்டை (த.ப)	52	63	115
		சோளகம்பட்டி	-	-	-
		மெய்குடிப்பட்டி	-	-	-
7. வேலாடிப்பட்டி	1.	நெப்புகை	106	225	331
		முல்லிக்காப்பட்டி	-	-	-
		ஒத்தவீடு	-	-	-
		உரியம்பட்டி	-	-	-
	2.	அண்டனூர்	96	165	261
		மஞ்சம்பட்டி	-	-	-
		வேலாடிப்பட்டி	-	-	-
		அண்டனிவயல்	-	-	-
		பெரியமணக்கொல்லை	-	-	-

3.	வெள்ளாளர்விடுதி	120	174	294
	வெள்ளாளர்விடுதி(த.ப)	36	47 ·	83
	மங்கலாக்கோவில்	-	-	-
	குடிதாங்கிப்பட்டி	-	-	-
	வலச்சேரிப்பட்டி	-	-	-
4.	துவார்	141	488	629
	துவார் (த.ப)	15	92	107
	கொண்டயம் பட்டி	-	-	-
	கல்லுப்பட்டி	-	-	-
	புலக்கடைப்பட்டி	-	-	-
	சீவப்பட்டி	-	-	-
	பெத்தாரிப்பட்டி	-	-	-
	எல்லைத்தாரப்பட்டி	-	-	-
	ஆண்டிகுளப்பம்பட்டி	-	-	-
5.	ஆத்தங்காவிடுதி	46	67	113
	ஆத்தங்கரவிடுதி (த.ப)	35	48	83
	மேலெவாண்டான்விடுதி	-	-	
	கீலெவாண்டான்விடுதி	-	-	-
	இனாம்பட்டி	-	-	-
	தெற்குப்பட்டி	-	-	-

பரிசாத்த பிரதிநிதித்துவம்

கள ஆய்வில் மதிப்பீடு செய்யப்பட்ட தகவலாளிகளின் ஊர்களும் நபர்களின் எண்ணிக்கையும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை - 4

வஎண்	ஊரின் பெயர்	வயது	எண்ணிக்கை ஆண்	பெண்	மொத்தம்
1.	கந்தர்வகோட்டை	-14	1	1	
		15 - 35	-	10	
		35+	-	5	
			1	16	17
2.	அக்கச்சிப்பட்டி	-14	-	-	
		15 - 35	-	4	
		35+	-	3	
			-	7	7

3.	கல்லாக்கோட்டை	-14	-	7	
		15 - 35	-	1	
		35+	-	6	
			-	14	14
4.	வீரடிப்பட்டி	-14	-	5	
		15 - 35	-	10	
		35+	-	1	
			-	16	16
5.	கொத்தம்பட்டி	-14	-	-	
		15 - 35	1	1	
		35+	-	-	
			1	1	2
6.	கெண்டியன்பட்டி	-14	-	-	
		15 - 35	1	14	
		35+	-	-	
			1	14	15
7.	கோமாபுரம்	-14	-	-	
		15 - 35	1	9	
		35+	-	-	
			1	9	10
8.	மஞ்சப்பேட்டை	-14	-	5	
		15 - 35	-	5	
		35+	-	-	
			-	10	10
9.	ராஜாபட்டி	-14	-	-	
		15 - 35	-	3	
		35+	-	-	
			-	3	3
10	சமுத்திரப்பட்டி	-14	-	-	
		15 - 35	1	9	
		35+	-	-	
			1	9	10

11.	தெத்துவாசல்பட்டி	-14	-	-	
		15 - 35	3	3	
		35+	-	-	
			3	5	8
12.	துவார்	-14	-	-	
		15-35	1	-	
		35+	-	-	
			1	-	1
13.	புனக்குளம்	-14	-	1	
		15-35	1	5	
		35+	-	-	
			1	6	7
14.	அண்டனூர்	-14	-	2	
		15-35	-	5	
		35+	-	-	
			-	7	7
15.	குளத்தூர் நாயக்கன்பட்டி	-14	-	-	
		15-35	-	7	
		35+	-	-	
			-	7	7
16.	ஆத்தங்கரைப்பட்டி	-14	-	1	
		15-35	-	4	
		35+	-	-	
			-	5	5
17.	தச்சங்குறிச்சி	-14	-	5	
		15-35	-	3	
		35+	-	-	
			-	8	8
18.	சிவியார்குடிகாடு	-14	-	-	
		15-35	2	7	
		35+	-	-	
			2	7	9

19	மங்கனூர்	-14	-	7	
		15-35	2	-	
		35+	-	-	
			2	7	9
20.	நம்பூரான்பட்டி	-14	-	-	
		15-35	6	2	
		35+	-	2	
			6	4	10
21	நெப்புகை	-14	1	3	
		15-35	-	-	
		35+	-	-	
			-	8	8
22.	மஞ்சம்பட்டி	-14	1	3	
		15-35	-	-	
		35+	-	-	
			1	3	4
23	பெரியக்கோட்டை	-14	-	-	
		15-35	5	3	
		35+	-	-	
			5	3	8

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கத்தின் கற்றலுக்கான மொழித்திறன்களும் தரவுகள் சேகரிப்பதில் சிக்கல்களும்

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம் விதித்திருக்கின்ற அடிப்படையில் கற்போர்கள் மதிப்பீடு செய்யப்பட்டனர். எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் படிப்பறிவு ஆகிய மூன்று அலகுகளைக் (3R'S) கண்டறிய, சில நிபந்தனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவை

1 ஒரு நிமிடத்தில் 30 சொற்களை உரக்கப்படித்தல்

2. ஒரு நிமிடத்திற்கு 35 சொற்களை மனதிற்குள் படித்தல்

3. பாதை குறியீடுகளையும் விளம்பர அட்டைகளையும் செய்தித் தாள்களையும் படித்தல்

4. வாழ்க்கைக்குத் தேவையான செய்திகளைப் கண்டறிதல்

5. ஒரு நிமிடத்திற்கு ஏழு வார்த்தைகளைப் பார்த்து எழுதுதல்

6. ஒரு நிமிடத்திற்கு ஐந்து வார்த்தைகளைச் சொல்லச்சொல்ல எழுதுதல்.

7. கடிதம் மற்றும் விண்ணப்பம் எழுதுதல்

8. 1 முதல் 100 எண்களை எழுதவும் படிக்கவும் செய்தல்

9. *மூன்று இலக்கம் வரை கூட்டல் கழித்தலும், இரண்டு இலக்கம் வரை பெருக்கலும். வகுத்தலும் கற்றுக் கொள்ளுதல்*

10. *இடம்விட்டுச் சமமாக எழுதக் கற்றுக்கொள்ளுதல்*

மேலே கொடுக்கப்பட்ட கூறுகளைக் கருத்தில் கொண்டே கேள்வித்தாள்கள் தயாரிக்கப்பட்டன. களத்தில் அவைகளை நடைமுறைப் படுத்தும்பொழுது சில சிக்கல்கள் எழுகின்றன குறிப்பாக, எழுதுதல் மற்றும் வாசித்தலுக்கான நேரத்தை அளவிடுவது மிகவும் கடினமாக உள்ளது. காரணம் 1. ஒவ்வொருவராக வாசித்தால், அதைப் பார்த்துக் கொண்டு மற்றவர்கள் நினைவாற்றலிருந்து வாசிக்கின்றனர். 2. கற்போர்களைத் தனித்தனியே அழைத்துச் சென்று மதிப்பீடு செய்தால் மதிப்பீட்டு நேரம் அதிகமாகிவிடுகிறது எனினும் படிக்கும் வேகத்தையும், எழுதும் வேகத்தையும் அளவிடமுடிகிறது என்பதில் ஐயமில்லை.


Gandarvakottai Panchayat Union
N
S
THANJAVUR
THANJAVUR
THACHAN KURUCHI
MANJANPETTAH
VIRALI PATTY
PUVAL KULAM
ARIYANU PATTY
MUDUKULAM
PALAYA GANDARVAKOTTAI
ARAVAM PATTY
VIRADI PATTY
NANDIKKOTTAI
PUDUKKOTTAI
PUDUKKOTTAI
PUDUKKOTTAI
SUVAR
KAKAMBAKUDY
KARAMBAKUDI
PUDUKKOTTAI UNION

கற்போர்களின் தேர்ச்சி நிலையும் மற்றும் சமூகக் காரணிகளும்

பாடத்திட்டம் - அறிவொளித்தீபம் 1, 2, 3.

அறிவொளி இயக்கத்தில் "அறிவொளி தீபம்" என்னும் முதல்நூல் பயன்படுத்தப்படுகிறது. இம்முதல்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. மத்திய அரசு கொடுத்துள்ள கொள்கைகளின் அடிப்படையிலேயே அந்நூல்கள் தயாரிக்கப்பட்டன. இதைப் பயன்படுத்தி அறிவொளியில் கற்போர்களுக்கு ஆறுமாத காலத்தில் எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் விழிப்புணர்வு சொல்லித் தரப்படுகிறது. இந்நூலில் அமைந்துள்ள பாடத்திட்டங்கள் யாவும் "சீர்படுத்திக்கற்றல்" அணுகுமுறையை (IPCL) அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடமும் ஒரு முக்கிய சொல்லுடன் தொடங்கப்பட்டுள்ளது. கற்போரின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய முறையில் பாடத் தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்துகள் *247*உம் இந்நூல்கள் வழி கற்பிக்கப்படுகின்றன. இரண்டு மூன்று பாடங்களுக்கு ஒருமுறை மதிப்பீட்டுத் தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்தறிவும் எண்ணறிவும் ஒவ்வொரு பாடத்திலும் விரவி வருகின்றன. கற்போர்களின் வசதிக்காக இந்நூல் மூன்ற பகுதிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் அதன் மொழி மற்றும் பொருளடக்கத்தின் எளிமை வழி பிரிக்கப்பட்டுத் தொடர்ச்சியாகக் கற்பிக்கப்படுகின்றன. பகுதி ஒன்று முடித்தவர்கள் வேறிடத்திற்குச் செல்ல நேர்ந்தால் பகுதி இரண்டில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பது இம்முறையின் சிறப்பாகும்.

மதிப்பீட்டின்படி தேர்ச்சி நிலையைக் கண்டறிதல்

தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கம் நிர்ணயித்த மதிப்பெண் அடிப்படையில் *193* கற்போர்களின் தேர்ச்சி பிரிக்கப்பட்டுள்ளது. *50*

மதிப்பெண்களுக்குக்கீழ் உள்ளவர்கள் *6* சதவிகிதம். *50-59* மார்க்குகளில் உள்ளவர்கள் *12* சதவிகிதம். *60-69* மதிப்பெண்கள் உள்ளவர்கள் *40* சதவிகிதம். *70-79* மதிப்பெண் உள்ளவர்கள் *27* சதவிகிதம். *80* க்கு மேல் வாங்கியவர்கள் *41* சதவிகிதம். எல்லாவற்றிலும் சேர்த்து *70*க்கு மேல்வாங்கியவர் *79* பேர்கள் அதாவது *41* சதவிகிதம் இதில் *50*க்கு மேல்வாங்கியவர்கள் *94* சதவிகிதம். தேசிய எழுத்தறிவு முனைப்பு இயக்கத்தின் அடிப்படையில் தேர்ச்சி பெற்றவர்கள் *41* சதவிகிதத்தினர். *(அட்டவணை-5).*

வயதுவாரியாகக் கற்றல் தேர்ச்சி நிலை

பொதுவாக, கற்றல் தேர்ச்சி நிலையைக் கண்டறிவது மேற்கொண்டு ஆராய்ச்சி செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். *15* வயதிற்கு உள்பட்டவர்கள் *67* சதவிகிதம் கற்கிறார்கள். *35* வயதிற்கு மேற்பட்டவர்கள் *71* சதவிகிதம் கற்கிறார்கள். *15-24* வயதினர் *65* சதவிகிதம் கற்கிறார்கள். *25-34* வயதினர் *64* சதவிகிதம் கற்கின்றார்கள். அதாவது கற்றல் தேர்ச்சி *35* வயதிற்கு மேற்பட்டவர்களிடம் அதிகமிருக்கிறது. *(அட்டவணை-6).*

எழுத்தறிவுத் திறன்களின் தேர்ச்சி நிலை

பொதுவாக எண்ணறிவில் கற்கும் தேர்ச்சி அதிகமாகவுள்ளது. அதில் *92.2* சதவிகிதம் கற்றிருக்கிறார்கள். படித்தலில் *60. 9* சதவிகிதம் கற்றல் ஆற்றல் இருக்கிறது. எல்லா வயதினரும் கணக்கில் அதிகம் கற்கிறார்கள். *15* வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் படிப்பதில் சிரமப்படுகிறார்கள். படிப்பறிவு *20* சதவிகிதம் மட்டுமே அவர்களுக்கு இருக்கிறது. எழுதுவதில் *48* சதவிகிதம் தேர்ச்சி இருக்கிறது. *(அட்டவணை-7).*

சாதிவாரியான கற்றல் நிலை

சாதிவாரியாகப் பார்த்தால் தேர்ச்சியில் அதிக வித்தியாசம் இல்லை. தாழ்த்தப்பட்டோரும் பிற்பட்டோரும் ஏறத்தாழ ஒரே கற்றல் தேர்ச்சி நிலையில் உள்ளனர். ஆண், பெண் கற்றலில் கூட அதிக வித்தியாசம் காணப்படவில்லை என்பது இவ்வாய்வில் தெரிகிறது. *(அட்டவணை - 8 9, 10).*

அட்டவணை - 5 மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ச்சி நிலை

மதிப்பெண்கள்	நபர்கள்	சதவிகிதம்
*50*க்குக் கீழ்	*12*	*6*
50 - 59	*25*	*12*
60 - 69	*77*	*40*
70 - 79	*71*	*37*
80 க்கு மேல்	*8*	*41*
*70*க்கு மேல்	*79*	*40.9%*
*50*க்கு மேல்	*181*	*93.7%*

அட்டவணை - 6 வயது வாரியாகக் கற்றல் தேர்ச்சி நிலை (சதவிகிதத்தில்)

நபர் எண்ணிக்கை	வயது பகுப்பு	படித்தல்	எழுதுதல்	எண்ணறிவு	மொத்தம்
18	15 வயதிற்குக்கீழ்	20	49	97.7	67
112	15 - 24	58.2	46.9	91.8	64.9
39	25 - 34	57.6	47.2	90.2	64.3
24	35வயதிற்கு மேல்	64	52.3	97.5	70.9

அட்டவணை-7 எழுத்தறிவு திறன்களில் தேர்ச்சி (சதவிகிதத்தில்)

படிப்பறிவு	எழுத்தறிவு	எண்ணறிவு
60.9	48	92.2

அட்டவணை - 8 சாதி வாரியாகக் கற்றல் தேர்ச்சி (சதவிகிதத்தில்)

சாதி		நபர்	படிப்பறிவு	எழுத்தறிவு	எண்ணறிவு	மொத்தம்
தா.ப.	ஆண்	15	64.1	47.3	93	67.8
	பெண்	54	56.3	47	91.6	71.5
பி.ப.	ஆண்	13	64.8	50	91	68
	பெண்	111	58.7	48	93.4	65.9

அட்டவணை - 9 பொது கற்றல் தேர்ச்ச' (சதவிகிதத்தில்)

சாதி	நபர்	படிப்பறிவு	எழுத்தறிவு	எண்ணறிவு	மொத்தம்
தா.ப.	69	60.2	47.15	92.3	69.6
பி.ப.	124	61.7	49	92.2	66.9

அட்டவணை - 10 பொது கற்றல் தேர்ச்சி (சதவிகிதத்தில்)

நபர்		படிப்பறிவு	எழுத்தறிவு	எண்ணறிவு	மொத்தம்
ஆண்	28	64.4	48.6	92	67.9
பெண்	165	57.5	47.5	92.5	68.7
மொத்தம்	193	60.9	48	92.2	68.3

அறிவொளித் திட்டத்தில் கற்போர்கள் மதிப்பீடு

அறிவொளித் திட்ட கற்போர்களை மதிப்பீடு செய்வது மிகவும் கடினம். காரணம் அவர்களைத் தனித்தனியே அழைத்து மதிப்பிடுவது முடியாது என்பதாகும்; தனியே வரமாட்டார்கள். மேலும் அவர்கள் ஒருவருக்கொருவர் வினாத்தாள்களைப் பரிமாறிக் கொள்வார்கள். அறை சிறிதாயிருக்குமாதலால் நெருக்கமாய் உட்கார்ந்து இருப்பார்கள். விளக்கு வசதி இன்மையால் கும்பலாக அமர்ந்து எழுதுவார்கள். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்யவேண்டும். மேலும், அறிவொளி போன்ற இயக்கத்தில் உள்ள கற்போர்களை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் மதிப்பிடுவதும் சிரமம் நல்ல முறையில் தேர்வு நடத்த வேண்டுமானால் ஒரு நாளைக்கு நான்கு

பேர்களைத்தான் மதிப்பீடு செய்ய முடியும். பல இலட்சக்கணக்கான கற்போர்களை மதிப்பிட ஆயிரக்கணக்கில் மதிப்பீட்டாளர்கள் தேவைப்படும் என்பதால்தான் பரிசாத்த பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படுகிறது. இந்த ஆய்வில் *1 . 5* சதவிகித கற்போர்கள் மட்டுமே பரிசாத்த பிரதிநிதிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டனர். காரணம் இது ஒரு தனி ஆய்வு என்பதாலும், இவ்வாய்வை முடிக்க ஆறுமாத காலமே எடுத்துக் கொள்ளப்பட்டதாலும் பிரதிநிதித்துவம் (Sample) குறைவாகக் கண்டறியப்பட்டது.

விழிப்புணர்வு பயனீட்டு நிலை

இவ்வாய்வில் கலந்துகொண்ட *28* ஆண்களும் *165* பெண்களும் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டனர். பொது அறிவு மற்றும் தன்னம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். அறிவொளிதான் இவர்களுக்கு ஒளியைக் கொடுத்தது என்று சொல்கிறார்கள். இது ஒரு மக்கள் இயக்கமாகிவிட்டதால் எல்லோரும் இதில் கலந்து கொள்கிறார்கள். ‘ஊரோடு ஒக்க ஒடு’ என்ற பழமொழிக்கிணங்க எல்லோரும் இதில் பங்கேற்கிறார்கள். பாட்டு, கலைநிகழ்ச்சிகள் மையத்தில் நடைபெறுவதால், கற்போர்களிடம் ஆர்வம் மிகுதியாக இருக்கிறது ஒரு தொண்டர் பத்து நபர்களுக்கே சொல்லிக் கொடுப்பதால் தொண்டர்கள் அவர்களின்மீது தனிக்கவனம் செலுத்த முடிகிறது. கற்பிக்கும்பணி கற்போர்கள் வாழுமிடங்களிலே நடைபெறுவதால், எளிதில் மையங்களுக்கு வந்துவிடுகிறார்கள். எல்லாவற்றையும்விட முக்கியமான செய்தி என்னவென்றால், கற்றல் சூழல் நன்கு உருவாக்கப்பட்டுள்ளது.

அறிவொளி தீபம்

அறிவொளியில் அறிவொளி தீபம் என்ற முதல் நூல்கள் மூன்று பயன்படுத்தப்படுகின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் இரண்டு திங்கள்களில் நாள் ஒன்றுக்கு *1 1/2* மணி வீதம் மையங்களில் நடத்தப்படுகிறது. இந்த நூல்களிலுள்ள பாடங்களின் தலைப்புகள்யாவும் ஆர்வமூட்டுவனவாக உள்ளன. இருப்பினும் பாடத்தின் எண்ணிக்கையையும் பக்கங்களையும் சிறிது குறைத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், புத்தகத்தின் கட்டமைப்பில் ஒவ்வொரு பாடத்திலும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. *1.* படிப்பதற்கான பகுதி / எழுதுவதற்கான பகுதி / புரிந்துகொள்வதற்கான பகுதி. *2.* மதிப்பீட்டுப் பகுதி. இதில் மதிப்பீட்டுப் பகுதியைத் தனியே ஒரு புத்தகமாகக் கொடுத்திருக்கலாம். இதனால் புத்தகத்தின் கனமும் குறையும். கற்போர்களுக்கு எளிதில் பாடங்களைப் புரட்டவும் முடியும். மற்றபடி முதல்நூல் மூன்றாம் பகுதி கற்போர்களுக்குப் படிக்க, பழக்கத்திற்கு வராததால், தொடர்கல்வித் திட்டத்தில் அந்த நூலையே மீண்டும் நடத்த வேண்டும் எனப்பரிந்துரை செய்யப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி பற்றிய மதிப்பீடு

முதல் அறிவொளி மாநாடு இம்மாவட்டத்தில் 23.7.91 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒன்றிய அளவிலான மாநாடுகள் நடத்தப்பட்டன. மாவட்ட அளவிலான கணக்கெடுப்பு 15.9.91 அன்று ஒரே நாளில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பில் ஆயிரக்கணக்கான பயிற்சி பெற்ற தொண்டர்கள் கலந்துகொண்டனர். இவ்வியக்கத்திற்குச் சாதகமான சூழலை உருவாக்கப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றியத்திற்கு ஒரு கலைக்குழு வீதம் 30 கலைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1991 செப்டம்பர் 3லிருந்து17 வரையில் கலைப் பயணங்கள் நடத்தப்பட்டன. மேலும் ஒன்றிய அளவிலும் நகராட்சி அளவிலும் நடத்தப்பட்ட அறிவொளி மாநாடுகள் மக்களின் மத்தியில் எழுத்தறிவின் தேவையை உணர்த்தின. கிராம அளவில் அறிவொளி திருவிழாக்கள் நடத்தப்பட்டன. பொதுக் கூட்டங்கள், மிதிவண்டி பேரணி போன்றவை தொடர்ச்சியாக நடத்திக் காண்பிக்கப்பட்டன.

சுவர் எழுத்துக்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்ற பிரசார உத்திகள் மேற்கொள்ளப்பட்டன. வானொளி, செய்தித்தாள்கள் பிரசாரத்தில் பெரும் பங்கு வகித்தன. எழுத்தறிவுக்கு ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்க முடியும் என்பதை இம்மாவட்ட அறிவொளி இயக்கம் நிரூபித்துள்ளது. இது மக்களின் இயக்கமாக மாறிய காரணத்தால்தான் எழுத்தறிவின் தேவையை மக்கள் உணர்ந்தார்கள். பின்னர் கற்பிக்கும் பணி அக்டோபர் 2 ஆம் நாள் தொடங்கியது. ஒவ்வொரு தொண்டரும் 10 கல்லாதவர்களுக்கு எழுத்தறிவு கற்றுக் கொடுத்தார்கள். கற்பிக்கும் பணி ஆறுமாத காலம் நடைபெற்றது. இம்மாவட்ட அறிவொளித் திட்டம் தொடங்கிய ஓர் ஆண்டிற்குள் நிறைவுற்றது இங்கு குறிப்பிடத்தகுந்ததாகும்.

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி நிகழ்ச்சிகள்-1991 இல்

1.	புதுதில்லியில் இம்மாவட்டத்திட்ட வரைவு தேசிய எழுத்தறிவு இயக்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது	ஜூன்	28
2.	புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத் தொடக்க விழா	ஜூலை	23
3.	முக்கியக் கருத்தாளர் பயிற்சி முகாம்	”	27-29
4.	ஒன்றிய அளவிலான அறிவொளி மாநாடுகள்	ஆகஸ்டு	1-20
5.	கிராம அறிவொளி மாநாடுகள்	”	20-31
6.	அறிவொளிக் கலைப்பயணம் தயாரிப்பு முகாம்	”	9-13
7.	அறிவொளிக் கலைக்குழு பயிற்சி முகாம்	”	14-16
8.	கருத்தாளர் பயிற்சி முகாம்	”	15-18
9.	கலைக்குழு பயிற்சிப் பட்டறை	”	17-31
10.	மாவட்டம் முழுவதும் கலைக்குழுவின் பிரசாரம் (கலா ஜாதா)	செப்டம்பர்	21வரை
11.	அறிவொளி கருத்தாளர் புத்தொளிப் பயிற்சி முகாம்	செப்டம்பர்	1
12.	தலைமைப் பயிற்சியாளர் பயிற்சி முகாம்	”	2-3
13.	கிராமக் குழுக்கள் அமைத்தல்.	”	1-15
14.	கணக்கெடுப்பு பயிற்சி முகாம்	”	1-15
15.	மகளிர் மாநாடு	”	1-15
16.	கற்போர் சந்திப்பு மற்றும் கணக்கெடுப்பு	”	16-18
17.	கிராம அமைப்பாளர்கள் மாநாடு	”	19
18.	ஒன்றியங்கள்தோறும் முதன்மைப் பயிற்சியாளர் பயிற்சி முகாம்	”	24-26
19.	தொண்டர்கள் பயிற்சி முகாம்	27முதல் அக்டோபர்	1
20.	கற்பிக்கும் பணி துவக்கம்	அக்டோபர்	2
21.	கருத்தாளர் புத்தொளிப் பயிற்சி	”	14-15
22.	பெற்றோர்கள் பிள்ளைகள் சந்திப்பு	”	16
23.	மாவட்டம் முழுவதும் பிள்ளைகள் பள்ளியில் சேர்ப்பு	”	18
24.	ஒன்றியம்தோறும் முதன்மைப் பயிற்சியாளர் புத்தொளி முகாம்	”	20-22
25.	தொண்டர்களுக்கான புத்தொளிப்பயிற்சி	”	26-27
26.	அறிவொளித் திருவிழாக்கள்	”	16-31
27.	அறிவொளிப் பாடல் போட்டிகள்	நவம்பர்	1-11
28.	மகளிர் குழுக்கள் உருவாக்குதல்	”	10-20
29.	மாவட்டக் கல்விக் குழு உருவாக்குதல்	”	17
30.	மிதிவண்டிப் பயணம்	”	1-30
31.	தெருக்கள்தோறும் அறிவொளிப் பாடல்	”	17
32.	குழந்தைகள் திருவிழா	”	28

33.	விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்	டிசம்பர் 1-15
34.	மாவட்ட ஆட்சியருடன் மக்கள் சந்திப்பு	" 12
35.	முக்கியக் கருத்தாளர்கள் பயிற்சி முகாம்	" 22-24
36.	பிரசாரக் குழுத் தலைவருக்கான பயிற்சி முகாம்	" 25-31
37.	கருத்தாளர் பயிற்சி முகாம்	" 28-30
38.	தலைமைப் பயிற்சியாளர்களக்குப் புத்தொளிப் பயிற்சி	ஜனவரி 3-5
39.	தொண்டர்கள் பயிற்சி முகாம்	" 10-12
40.	கலைப்பயணம்	17 முதல் பிப்ரவரி 7 வரை
41.	கலைப்பயண நிறைவு விழா	பிப்ரவரி 8
42.	ஒருங்கிணைப்பாளர் பயிற்சி முகாம்	" 14-17
43.	மகளிர் மிதிவண்டி யாத்திரை	24 முதல் மார்ச்சு 8 வரை
44.	வாலிபர் கற்போர் சந்திப்பு இயக்கம்	" 3-14
45.	மிதிவண்டி கடன் வழங்கல்	" 8
46.	முக்கியக் கருத்தாளர் பயிற்சி முகாம்	" 11
47.	ஒன்றியங்கள்தோறும் முதன்மைப் பயிற்சியாளர் பயிற்சி முகாம்	" 12
48.	தொண்டர்கள் பயிற்சி முகாம்	" 14-15
49.	ஒன்றிய மாநாடுகள்	" 15-31
50.	கற்பிக்கும் பணி நிறைவு	13 . 04 . 91
51.	அறிவொளி வெற்றி விழா	ஆகஸ்டு 11

சிறப்பு அம்சங்கள்

9 முதல் 15 வயது வரையிலான 2.2 இலட்சம் நபர்கள் அறிவொளி மூலம் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டார்கள்.

60,000 பெண்கள் மிதிவண்டி ஓட்டத் தெரிந்துகொண்டார்கள்

புதுகோட்டை மாவட்டம், அறிவொளிக்கு முன்னர் 70 சதவிகிதம் எழுத்தறிவு பெற்றிருந்தது.

அறிவொளிக்குப் பின்னர் 90சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

5000க்கு மேற்பட்ட அறிவொளி ஒலி நாடாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஊர்கூடி என்ற செய்தித்தாள் 40,000 பிரதிகள் ஒவ்வொரு திங்களும் வெளியிடப்படுகின்றன.

இதில் *20* சதவிகித ஒருங்கிணைப்பாளர்கள் பெண்கள் ஆகும்.

1500 பெண் அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டிக் கடன் வழங்கப்பட்டது.

அறிவொளியின் பயனால் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கையில் எண்ணிக்கை கனிசமான அளவில் உயர்ந்துள்ளது.

முடிவுரை

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட *195* நபர்களில் *87* நபர்கள் பள்ளியிலிருந்து இடை விலகியவர்களாகும். இவர்களில் *7,* மற்றும் *8* ஆவது படித்த சிலரும் இருந்தனர். அவர்கள் மதிப்பீட்டிலிருந்து விலக்கப்பட்டு, *193* நபர்கள் மட்டுமே இவ்வாய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டனர். *106* நபர்கள் மட்டுமே புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களாகும். மற்றவர்களில் *6* நபர்கள் *1* ஆவது முடித்தவர்கள். *28* நபர்கள் *2* ஆவது முடித்தவர்கள். *22* நபர்கள் *3* ஆவது முடித்தவர்கள். *11* நபர்கள் *4* ஆவது முடித்தவர்கள். *20* நபர்கள் *5* ஆவது முடித்தவர்களாக இருக்கின்றனர். பள்ளியிலிருந்து இடைவிலகியவர்கள் அனைவரும் மீண்டும் எழுத்தறிவு பெற இவ்வறிவொளி இயக்கம் வழி வகுத்துள்ளது. எனவே, அறிவொளி மூன்று வழிகளில் இம்மாவட்டத்தில் செயல்பட்டு உள்ளது. *1.* முதல்முறை கற்பவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. *2.* ஏற்கெனவே ஆரம்பப் பள்ளிகளில் படித்து நின்றவர்களுக்கு மீண்டும் எழுத்தறிவு பெற ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. *3.* ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளின் சேர்க்கையின் எண்ணிக்கையை அது உயர்த்தியுள்ளது.

மேலும் அறிவொளியில் பயின்ற முதியவர்களுக்கு, தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்ற உணர்வை அறிவொளி ஏற்படுத்தி உள்ளது. முன்பெல்லாம் எழுத்தறிவுத் திட்டத்தை குறை கூறியவர்களும் புறக்கணித்தவர்களும் தற்போது அதில் ஈடுபட்டு வருவதற்குக் காரணம்; இது ஒரு மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டதுதான். தனி ஒருவர் செய்கின்ற செயலை இழித்தும் பழித்தும் ஒதுக்குவார்கள் நம் பெரியவர்கள். அதில் அவர்களையே ஈடுபடுத்திவிட்டால் பலன் கிடைத்துவிடுகிறது. அறிவொளியில் அதுதான் நடந்துள்ளது. எனவே, அறிவொளி இயக்கம் எழுத்தறிவின் தேவையை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது என்பதும் மக்கள் அதை வரவேற்கிறார்கள் என்பதும் இவ்வாய்வின் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. "Pudukkottai district at a glance" The Hindu dt., 26.4.1993.

2. "Modalities of Total Literacy Declaration & Evaluation of learning outcomes" - Report of the Expert Group submitted to the Executive mittee of NLMA., New Delhi - August, 1992.

3. "Total Literacy-UEE campaigns, Guidelines for project formulation" - Ministry of Human Resource Development - New Delhi - July, 1992.

4. The Turning point - 'Some thoughts on adult education' Published by Directorate of Adult Education - New Delhi - Sept. 1992.

5. Towards Total Literacy - 'Some thoughts on Adult Education' - Published by Directorate of Adult Education, New Delhi - Sept. 1991.

6. A Guide Book for a Mass Campaign for Total Literacy produced by BGVS, and reproduced by SRC. Madras.

7. Literacyand Empowerment, Venkatesh B Athreya Sheela Rani chunkath, Sage Publications, India Pvt. Ltd., New Delhi - 1996.

8. தமிழ்ப் பொழில், தமிழாராய்ச்சித் திங்களிதழ், கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு - தஞ்சாவூர் - மே - ஜூன், 1991.

9. எழுத்தறிவு முனைப்பு இயக்கம் மாத இதழ் - ஜூன் மற்றும் செப்டம்பர், 1991, புதுதில்லி.

10. எல்லோருக்கும் எழுத்தறிவு, நூறு சதவிகித எழுத்தறிவுத் திட்டம், மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூல வெளியீடு, சென்னை, அக்டோபர், 1991.

11. இந்து பத்திரிகை நாள் 2 . 12. 1991 "2000த்திற்குள் முழு எழுத்தறிவு முடியுமா?"

12 பாலோ ஃப்ரெயரி (Paulo Freire), விமர்சன விழிப்புணர்வுக்கான கல்வி, மொழிபெயர்ப்பு மலையாளம் - தமிழ் வி. கெ. பாலகிருஷ்ணன், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை - 1992.

பிற்சேர்க்கை - 1 வினாத்தாள்

ஒன்றியம்
பஞ்சாயத்து

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்க
முழு எழுத்தறிவுத் திட்டம் கற்போர் மதிப்பீடு

மதிப்பிடும் நிறுவனம் : **தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 5.**

கற்போர் பற்றிய தகவல்

1. பெயர்
2. ஊர்
3. வயது
4. ஆண் / பெண்
5. வரிசை எண்

படிப்பறிவு (மதிப்பெண் 4C

1. கீழ்க்கண்ட வாக்கியங்களை உரக்கப் படிக்கவும் (நிமிடத்திற்கு 30 சொற்கள்
(மதிப்பெண்

ஒன்றே குலம் ஒருவனே தேவன். யாதும் ஊரே யாவரும் ஒன்றே ராமுவின் ஊர் நரிக்குடி. அது நெருக்கம் மிகுந்த கிராமம். சிறுவர், தெருவி மணல் வீடு கட்டுவர். மணல் வீடு கட்டுவதில் பிரச்சினை உண்டானது கிராமம் பிரிந்தது. கிராம முன்னேற்றம் தடைப்பட்டது. வீடும் நாடும் உய ஒன்றுபடு.

2. கீழ்க்கண்ட செய்திகளைப் புரிந்துகொண்டு படிக்கவும் (மதிப்பெண் 6X2=12

தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம் உயர்வு
தமிழ்நாட்டில் ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி
ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்த அரசுத் திட்டம்
மரங்களை வெட்டுவதில் அதிமாகப் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளே.
இந்தியாவின் புதிய பிரதமராகத் திரு நரசிம்மராவ் அவர்கள் பதவியேற்றார்
தமிழகத்தில் பொதுத்தேர்தல் மூலம் பெண் முதலமைச்சராகச்
செல்வி ஜெயலலிதா அவர்கள் தேர்வு

3. கீழ்க்கண்ட பத்தியைப் படித்துப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் (மதிப்பெண் 20)
(நிமிடத்திற்கு 35 சொற்கள் மனதிற்குள் படிக்கவும்)

இந்தியா நமது தாய்நாடு. தமிழ்நாடு நாம் வாழும் மாநிலம். இது இந்தியாவின் தென் பகுதியில் உள்ளது. தெற்கே இந்தியப்பெருங்கடல் உள்ளது. மேற்கில் கர்நாடகம், கேரளம் மாநிலங்கள் உள்ளன. கிழக்கே வங்காள விரிகுடாக் கடல் உள்ளது. தமிழ்நாட்டில் காவிரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி முதலிய முக்கிய ஆறுகள் உள்ளன. நமது மாநிலம் 22 மாவட்டங்களைக் கொண்டுள்ளது. இதன் மக்கள் தொகை ஐந்தரை கோடி. நமது மாநிலத்தின் தலைநகரம் சென்னை.

1. நமது தாய் நாட்டின் பெயர் என்ன?
2. நாம் வாழும் மாநிலத்தின் பெயர் என்ன?
3. கேரள மாநிலம் எங்கேயுள்ளது?
4. தமிழ்நாட்டில் ஓடுகின்ற இரண்டு ஆறுகளைக் கூறுக?
5. நமது மாநிலத்தின் தலைநகரம் எது?

எழுத்தறிவு (மதிப்பெண் 30)

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. (மதிப்பெண் 5)

அ. என் பெயர் . . . .

ஆ. என் தந்தை அல்லது என் கணவர் பெயர் . . . .

இ. என் வயது . . . .

ஈ. எனது ஊரின் பெயர் . . . .

உ. எனது மாவட்டத்தின் பெயர். . . . .

2. சொற்களைச் சொல்லச்சொல்ல எழுதுக. (நிமிடத்திற்கு ஐந்து சொற்கள்) (மதிப்பெண் 5)

1. . . . . 2. . . . .

3. . . . . 4. . . . .

5. . . . .

3. உங்கள் கிராமத்திற்குப் பேருந்து வசதி வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, கீழ்கண்ட படிவத்தில் விண்ணப்பம் எழுதவும்

(மதிப்பெண் 20)

அனுப்புநர்

. . . .
. . . .
. . . .
. . . .

பெறுநர்

. . . .
. . . .
. . . .
. . . .

ஐயா / அம்மா,

பொருள்: . . . .

. . . .
. . . .
. . . .
. . . .
. . . .

தங்கள் உண்மையுள்ள,

நாள் :

இடம் :

(கையெழுத்து)

எண்ணறிவு (மதிப்பெண் 30)

1. விடுபட்ட எண்களைப் பூர்த்தி செய்யவும் (பத்தின் மடங்காக எழுதவும்) (2 x 2 = 4)

10		30		50

2. கீழ்க்கண்ட இரண்டு இலக்க எண்களைப் படிக்க. (2 x 2 = 4)

25 35

3. கீழ்க்கண்ட எண்களைக் கூட்டுக. (3 X 2 = 6)

+ 13
24
51

----

4. கீழ்க்கண்ட எண்களைக் கழிக்க (1 X 6 = 6)

89
- 42

----

5. பெருக்குக. (1 X 5 = 5

ஒரு நபருக்குக் கூலி, ரூபாய் 8.00 எனில் 5 நபருக்கு கூலி என்ன?

6. வகுக்க (1 X 5 = 5)

முருகனின் 6 நாள் கூலி 60 ரூபாய் எனில் அவனின்
ஒரு நாளைய கூலி என்ன?
60 / 6 =

தகவலாளியின் பொதுச் சூழல்

1. பள்ளியில் பயின்றவரா? : ஆம் எனில் எதுவரை/இல்லை

2. பெற்றோர்கள் படித்தவர்களா? : ஆம் எனில்
தாய் எதுவரை
தந்தை எதுவரை
இல்லை

3. தாய்/தந்தையின் வேலை என்ன? :
தாய் :
தந்தை :

4. தாய், தந்தை இருக்கின்றார்களா?
தாய் : உண்டு / இல்லை
தந்தை : உண்டு / இல்லை

5. ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறதா? : உண்டு / இல்லை

6. பள்ளியிலிருந்து விடுபடக்காரணம் என்ன? : 1. வீட்டு வேலை

2. குடும்பச்சூழல்

3. கூலிவேலை

7. பிற பிள்ளைகளுடன் பழக வாய்ப்புள்ளதா? : உண்டு / இல்லை

8. தற்போது எதுமாதிரியான வேலையில் ஈடுபட்டுள்ளீர்கள்? :

9. தற்போது எழுதப்படிக்க முடிகிறதா? : ஆம் / இல்லை

10. அறிவொளியின் பயன்பாடு எந்த அளவில் உள்ளது? :
(சில கேள்விகளைக் கேட்டு எழுதவும்)

11. அறிவொளித் திட்டத்தின் குறை / நிறை

1. இயக்க அளவில்

2. ஒருங்கிணைப்பு அளவில்

3. ஆர்வமூட்டும் வகையில்

4. மக்களைத் திரட்டும் வகையில்

5. பாடம் சொல்லிக் கொடுக்கும் வகையில்

(மேலே சொல்லப்பட்ட ஐந்தின் அடிப்படையில் களத்தில் கண்டறியப்படும்)

பிற்சேர்க்கை - 2

அறிவொளி அனுபவங்கள்

புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் *9 - 45* வயதில் *2,90,000* கற்போர்கள் பதிவு செய்யப்பெற்றனர். இம்மாவட்டத்தில் அறிவொளியில் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டவர்கள் *2.2* இலட்சம் பேர்கள். இப்பொழுது இம் மாவட்டத்தின் எழுத்தறிவு நிலை *90* சதவிகிதமாகும். இவர்களுக்கு கல்வி கொடுக்க இம்மாவட்டத்தில் *30,000* தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத்திற்கு அம்மாவட்ட ஆட்சியரே தலைவர் ஆவார். இம் மாவட்டத்தில் *13* ஒன்றியங்களும் *2* நகராட்சிகளும் உள்ளன.

ஒன்றியங்களின் பெயர்கள்

1. அன்னவாசல்
2. அரிமளம்
3. குன்னாண்டார் கோவில்
4. புதுக்கோட்டை
5. பொன்னமராவதி
6. திருமயம்
7. விராலிமலை
8. அறந்தாங்கி
9. ஆவுடையார்கோவில்
10. கந்தர்வகோட்டை
11. கரம்பக்குடி
12. மணமேல்குடி
13. திருவரங்குளம்

நகராட்சிகள்

14. புதுக்கோட்டை
15. அறந்தாங்கி

இம்மாவட்டத்தில் *8* நகர் பஞ்சாயத்துகளும், *498* பஞ்சாயத்துகளும் உள்ளன. மொத்தம் *757* கிராமங்கள் உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள இரண்டு கலைக்கல்லூரிகளும், ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும், ஒரு தொழிற் பயிற்சிக் கல்லூரியும், ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் இத்திட்டத்திற்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. மேலும் இங்குள்ள *36* மேநிலைப் பள்ளிகளும், *78* உயர்நிலைப் பள்ளிகளும் பெருவாரியான மாணவத் தொண்டர்களை உருவாக்கித் தந்துள்ளன.

தாலுக்காக்கள்

1. புதுக்கோட்டை *2.* திருமயம் *3.* குளத்தூர் *4.* அறந்தாங்கி
5. ஆவுடையார்கோவில் *6.* கந்தர்வகோட்டை

வருவாய்க் கோட்டம்

1. புதுக்கோட்டை *2.* அறந்தாங்கி

இம்மாவட்டத்தின் பரப்பளவு *4,540* சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை *13,22,494.* இதில் ஆண்கள் *6,59,241.* பெண்கள் *6,63,253.* அறிவொளிக்கு முன் எழுத்தறிவு நிலை *50.03* சமவிகிதமாகும் *(1991).*

அறிவொளி இயக்கத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆயிரக்கணக்கானோர் ஓராண்டு சேவை செய்தனர். *2,90,000* கற்போர்களுக்கு அறிவொளி கொடுக்க *29,000* தொண்டர்கள் தேவைப்பட்டனர். இவர்களுக்குப் பயிற்சி கொடுக்க *2,000* தலைமைப் பயிற்சியாளர்கள தேவைப்பட்டனர். இவர்களுக்குப் பயிற்சி கொடுக்க *100* கருத்தாளர்கள் ஈடுபட்டனர். இவ்வளவு கருத்தாளர்களை உருவாக்க *7* முக்கிய கருத்தாளர்கள் பயிற்சி கொடுத்தனர். மேலும் அறிவொளிப் பணிகளை முழுநேரமாகக் கவனிக்க ஆறு மைய ஒருங்கிணைப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டார். இவர்களுக்கு உதவி செய்ய *3,000* கற்போர்களுக்கு ஒரு உதவி ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டார். இந்தப் பணிகளைக் கண்காணிக்கக் கிராம அளவிலிருந்து மாவட்டத் தலைமை வரை பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டன.

அறிவொளி இயக்கத்தின் அடிப்படை அம்சங்கள்

1. இது ஒரு முகாம் அணுகுமுறைத் திட்டம்
2. இது தொண்டர் அடிப்படையிலான திட்டம்
3. இதில் மக்கள் பங்கேற்பு இருக்கும்
4. பழைய வயதுவந்தோர் கல்வித் திட்ட அணுகுமுறைக்கும், இதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு
5. இது ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்து எடுத்துச் செயல்படுத்துவது.
6. ஒரு தொண்டர் *10* கற்போர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.
7. இது அரசும், மக்களும் இணைந்து நடத்துவது
8. இது குறிப்பிட்ட காலவரைக்குட்பட்டது
9. தேக்க நிலையிலிருந்து ஒரு உற்சாக நிலைக்கு இட்டுச் செல்வது
10 இதில் தொண்டு செய்வோருக்கு ஊக்க ஊதியம் எதுவும் வழங்கப்படுவதில்லை
11. இத்திட்டம் மக்கள் வீடு தேடிச் செல்கிறது.

செயல் வடிவம் - பருவங்கள்

1. தயார் நிலைப் பருவம் / ஆர்வமூட்டும் நிலை, *3* மாதங்கள
2. கற்பிக்கும் பருவம் / எழுத்தறிவு நிலை, *6* மாதங்கள்
3. மதிப்பீட்டுப் பருவம் / ஒருங்கிணைப்பு நிலை, *3* மாதங்கள்

நிருவாகம் / ஒருங்கிணைப்பாளர்கள்

அறிவொளி மாவட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவா	மாவட்டக் கமிட்டி	மைய ஒருங்கிணைப்பாளர்
நகராட்சி / ஒன்றிய அலுவலர்	ஒன்றிய/நகராட்சி கமிட்டி	நகராட்சி / ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்
கிராம நிர்வாக அலுவலர்	உப ஒன்றிய கமிட்டி	உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர்
கிராம பஞ்சாயத்து தலைவர்	கிராமக் கமிட்டி வார்டு கமிட்டி	கிராம அமைப்பாளர்

தமிழகத்தில் எழுத்தறிவு நிலை
(1981 & 1991 இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு)

மாவட்டம்	1981 (%-ல்)			1991 (%-ல்)		
	கற்றோர்	ஆண்	பெண்	கற்றோர்	ஆண்	பெண்
தமிழ்நாடு	46.8	58.3	35.0	63.72	74.88	52.29
சென்னை	68.4	75.6	60.7	72.54	77.59	67.12
செங்கை	48.0	59.7	35.6	57.45	66.66	47.82
தென்னார்க்காடு	36.8	49.4	23.8	45.76	56.88	34.26
வடஆர்க்காடு	40.9	53.5	28.0	49.54	60.12	38.79
தர்மபுரி	29.0	39.0	18.6	39.83	48.38	30.74
சேலம்	39.3	50.0	28.1	47.59	56.80	37.30
பெரியார்	39.8	51.8	27.3	48.72	59.05	37.97
கோவை	53.1	64.1	41.6	60.80	68.46	52.38
நீலகிரி	56.5	67.7	44.8	63.78	72.55	54.80
மதுரை	50.8	62.4	38.5	53.25	63.38	42.84
திண்டுக்கல்	41.2	53.8	28.3	50.38	60.99	39.48
திருச்சி	45.6	58.4	32.6	53.74	64.47	42.84
தஞ்சை	50.4	62.6	37.9	57.64	67.42	47.82
புதுக்கோட்டை	38.7	53.6	23.9	50.03	62.21	37.91
ராமநாதபுரம்	42.8	56.3	29.8	52.46	63.46	41.67
பசும்பொன் முத்துராமலிங்கம்	44.7	59.2	30.8	55.01	67.26	43.11
காமராசர்	47.7	60.7	34.7	54.86	65.77	43.89
சிதம்பரனார்	56.1	65.6	47.1	63.20	70.70	56.04
நெல்லை கட்டபொம்மன்	49.7	61.9	38.0	56.53	66.51	46.89
கன்னியாகுமரி	63.9	68.6	59.1	72.14	75.33	68.93

பிற்சேர்க்கை - 4

உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை

நாடுகள்	மக்கள் தொகை	எழுத்தறிவு நிலை
யு.எஸ்.எஸ்.ஆர்.	*286.7 மி (1989)*	*100%*
பர்மா	*39.84மி (1988)*	*100%*
கியூபா	*10.24 மி (1986)*	*100%*
வியட்நாம்	*64 மி (1989)*	*100%*
நிகராகுவா	*3.5 (1987)*	*100%*
தான்சானியா	*23.2 மி (1987)*	*100%*
எத்தோப்பியா	*46 மி (1987)*	*100%*
சீனா	*1,180 மி (1993)*	*80%*
பாகிஸ்தான்	*84.25மி (1981)*	*35%*
வங்காளதேசம்	*87மி (1981)*	*36%*
யு.கே.	*55.78 மி (1981)*	*97%*
யு.எஸ்.ஏ.	*245.8 மி (1988)*	*97%*
இந்தியா	*844.3 மி (1991)*	*52.11%*

கலைச்சொற்கள்

Achievement level	-	கற்போர்களின் தேர்ச்சி
Continuity	-	தொடர்ச்சி
Co-ordination	-	ஒருங்கிணைப்பு
Field	-	களம்
Integrated primei	-	ஒருங்கிணைந்த முதல்நூல்
Kala Jatha	-	கலைப்பயணம்
Learners	-	கற்போர்கள்
Literacy skills	-	மொழித் திறன்கள்
Mass literacy programme	-	மக்கள் எழுத்தறிவுத்திட்டம்
Motivation	-	ஆர்வமூட்டல்
National Literacy Misson	-	தேசிய எழுத்தறிவு முனையம்
Neo-literates	-	புதியகற்போர்கள்
Sample	-	பரிசாத்த பிரதிநிதித்துவம்
Total Literacy campaign	-	முழு எழுத்தறிவுத் திட்டம்